47

முத்தமிழ்க் கலா வித்வரத்தினம்

திரு. டி. கே. சண்முகம்

அவர்கள்மீது இயற்றிய

சித்திர கவி மாலை

★

ஆக்கியோன் :

ஆசுகவி, கீர்த்தனை அரசு, சித்திர கவிச் சரபம்
கணித ஜோதிட கலாநிதி

...துல்கபூர் சாஹிப் புலவர்

...வையாறு — தஞ்சை

O-,194NAK1,C
N56
102838

முத்தமிழ்க் கலா வித்வரத்தினம்

திரு. டி. கே. சண்முகம்

அவர்கள்மீது இயற்றிய

சித்திர கவி மாலை

47
1-57

★

ஆக்கியோன் :

ஆசுகவி, கீர்த்தனை அரசு, சித்திர கவிச் சரபம்

கணித ஜோதிட கலாநிதி

P. V. அப்துல்கபூர் சாஹிப் புலவர்

திருவையாறு — தஞ்சை

★

வெளியிட்டோர் :

ஔவையகம்

சென்னை-6.

முதல் பதிப்பு :
14—12—56.
உரிமை பதிவு.

விலை ரூ. 2

கிடைக்குமிடம் :
ஔவையகம்
139-B, லாயிட்ஸ் ரோடு,
சென்னை-6.

P. V. அப்துல் கபூர் சாஹிப் புலவர்
திருவையாறு — தஞ்சை

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
சேப்பாக்கம், சென்னை-5.



தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள்

தலைவர்
முத்தமிழ்க் கலாவித்வ
ரத்தினம்
தி. க. சண்முகம்

புலவர்
ஆசுகவி கீர்த்தனை அரசு
சித்திரகவிச் சரபம்
கணிதசோதிட கலாநிதி
P. V. அப்துல் கபூர் சாஹிப்

முகவுரை

உலகினில் மற்றவர்கள் செய்ய முடியாதவற்றைச் செய்து காட்டி மக்களிடையே பெரும்புகழ் பெறுவோரும் உள்ளனர். சுமக்க முடியாதவற்றை மார்பின்மீது சுமந்து காட்டும் வல்லுடலினர், தூக்க முடியாதவற்றைக் கைகளால் தூக்கிக் காட்டும் தோள்வலியினர், ஓட முடியாத நெடுந்தொலைவை மிகக் குறைந்த நேரத்தில் ஓடி முடிக்கும் ஓட்டவெற்றியினர், நீந்த முடியாத கடற் பகுதி முதலியவற்றை ஒரே மூச்சாய்க் குறித்த நேரத்தில் நீந்திக் கடக்கும் பெருந்திறத்தினர், வெல்ல முடியாத உரமுடையோரையும் மற்போரில் மடக்கி வெல்லும் அருந்திண்மையினர் முதலானோர் இவ்வகையினர். இவர்தம் வெற்றிச் சிறப்புக்களுக்குக் காரணம், பல ஆண்டுகள் இடைவிடாமற் செய்த பயிற்சியும் முயற்சியும் ஊக்கமுமே ஆகும். செயற்கரிய செய்யும் வல்லமை என்றே இவர்கள் மக்களின் உள்ளத்தை ஈர்த்துப் புகழ் பெருக்குதற்குக் காரணமாகும்.

இவை யாவும் உடல்வலிமையையும் உடற் பயிற்சியையும் உடலுழைப்பையும் அடிப்படையாகக் கொண்ட வித்தைகள்.

உடலை விட மூளை மிகச் சிறந்த கருவி; மிக உயர்ந்த கருவி. அதனால்தான் வில்லேருழவரை விடச் சொல்லேருழவர் போற்றத் தக்கவர் என்றும், அவர்களின் பகை பொல்லாதது என்றும் திருவள்ளுவர் நாடாள்வோர்க்கு அறிவுறுத்தலானார்.

ஆயின், மூளை வலிமையையும் மூளைப் பயிற்சியையும் மூளையுழைப்பையும் போற்றுவதற்காகப் பொதுமக்கள் பெருந்திரளாகக் கூடுவதும் இல்லை; கண்டு வியப்பதும் இல்லை; மகிழ்ந்து போற்றுவதும் இல்லை. காரணம் என்ன ? உடல் பற்றிய அருஞ்செயல்கள் கட்புலனுவன; எளிதில் உணரப்படுவன. மூளை பற்றிய அருஞ்செயல்கள் கட்புலனுகாதன; மூளைக் கூர்மை கொண்டே அரிதில் உணரத்தக்கன. ஆதலின் பொதுமக்களின் போற்றுதலும் வியத்தலும் புகழ்தலும் இத்துறைக்கு அவ்வளவாக வாய்த்தல் இல்லை. எனினும், இத்துறையில் தேர்ந்த கலைஞரின் ஆற்றல் இணையிலாச் சிறப்புடையதாகும்.

ஆசுகவிப் புலவர் திருவாளர் அப்துல் கபூர் சாகிப் அவர்கள் பாடியுள்ள சித்திர கவிகள், சொல்லுலகப் பயிற்சி உடையவர்க்கு மிக்க வியப்பை ஊட்டுவனவாகும். இக் கவிஞர் பாடியுள்ள நிரோட்டமும் மாலை மாற்றும் திரிபங்கியும் பஞ்சபங்கியும் மாணிக்க மாலைப் பந்தமும் சிவலிங்க பந்தமும் வேலாயுத பந்தமும் மயில்வாகனப் பந்தமும் இரட்டை நாக பந்தமும் சதுர நாக பந்தமும் அஷ்ட நாக பந்தமும் நாலாரைச் சக்கர பந்தமும் ஆருரைச் சக்கர பந்தமும் எட்டாரைச் சக்கர பந்தமும் கடகபந்தமும் சதுரங்கப் பந்தமும் திருவடிப் பந்தமும் திருக்கைப் பந்தமும் தேர்ப்பந்தமும் கூடசதுக்கமும் மடக்குக் கீர்த்தனைகளும் இவர்தம் பயிற்சியின் பெருமையையும் புலமையின் சிறப்பையும் உணர்த்துவன ஆகும். தண்டியலங்காரம் முதலிய அணியிலக்கண நூல்களில் இல்லாத அமைப்புக்களும் நுட்பங்களும் பொருந்திய சித்திர கவிகள் பலவற்றை இவர் திறம்பட யாத்துள்ளார். பொதுவாக, சித்திர கவிகளை யான்

விரும்புவதில்லை. ஏனெனின் சித்திரகவிகளில் சொன் னயம் பொருணயம் காணமுடியாது என்பதே காரணம். இக் கவிஞரின் சித்திரகவிகளில் சொற்சுவை, பொருட் சுவை, பத்திச்சுவைகளை இலக்கணவரம்புதவருமல் அமைத்திருப்பதைக் கண்டு வியப்புற்றேன். இவர்களின் ஆர்வமும் திறனும் என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன.

இத் தமிழ் நூலின் பாட்டுடைத் தலைவராய புரவலர் நாடகக் கலையின் நன்மணி "முத்தமிழ்க் கலாவித்வ ரத்தினம்" எனத் திகழ்பவர். அவர் இக் கவிஞரின் அரிய கீர்த்தனைகள், சினிமா, நாடகம், பத்திரிகை முதலிய பல துறைகளிலும் பெருகுமாறு தூண்டி, அவை கலையுலகத் திலும் மக்களின் உள்ளத்திலும் நீடு நின்று பயன் பொழியச் செய்வார் என நம்புகின்றேன்.

மு. வரதராசன்.

மதுரை அமெரிக்கன் காலேஜில் தலைமைத்
தமிழாசிரியராகவிருந்து ஓய்வுபெற்ற

செந்நாப்புலவர் உயர்திரு

ஆ. கார்மேகக் கோனாரவர்கள் அளித்த

மதிப்புரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாமறிந்த வரை தமிழ் நாடகக்கலை பண்டைப் பெருமையும் இயலு மழிந்து தெருக்கூத்தென இழித்துப் பேசப்பட்டு வந்த தென்பதை யாவரும் நன்கறிவர். இதற்குக் காரணம் நடிகர்கட்கு முத்தமிழ்த் துறையில் இருந்த அறிவின் குறையேயாகும்.

பொதுமக்கள் தெருக்கூத்தினைக் கண்டு ஒருவாறு களித்தாலும் பின்னர் ஒரு நொடிப்பொழுதில் அக் களிப்பினை மறந்து நடிகர்களை இழிப்புரை பகர்ந்து ஏளனம் செய்வது இயல்பாக இருந்துவந்தது.

நாடகத்திற்கும் நடிகர்களுக்கும் ஏற்பட்ட இந்த இழிவந்த நிலைமையை அறவே நீக்கிய பெருமை நமது டி. கே. எஸ். சகோதரர்களுக்கே உரியதாகும். வெள்ளித் திரைக்காட்சி தன் செல்வாக்கினை நாடெல்லாம் செலுத்தி மக்களைத் தன் வயப்படுத்தி நிற்கின்ற நிலையில் அதில் நின்று வெளிப்போந்து, இந்நாடகக் கலையை நம் சகோதரர்கள் கைக்கொண்டு போற்றிப் புரக்காவிடில் இதற்குள்ளாக நம் நாடகக்கலை, மேடையேறலின்றிப் பாடையேறியிருக்கும். டி. கே. எஸ். சகோதரர்களுக்கு நாடகக்கலையின் வழியாகப் பெரும் புகழும் உண்மை

யான நன்மதிப்பும் ஏற்பட்டிருப்பது, இவர்களில் ஒருவ ரான திரு. சண்முகம் அவர்களுக்கு நடிப்பின் திறமை யோடு செந்தமிழ் மொழியிற் சீரிய அறிவும், பைந் தமிழ்மொழியைக் கன்னலுங்கைப்ப, இன்னமிழ்தென எடுத்தியம்பிக் கேட்போருள்ளத்தை எல்லையில்லா மகிழ்ச்சிக் கடலுள் மூழ்கித் திளைக்கச் செய்யும் திறனும் அமைந்திருப்பதேயாம்.

இத்தகைய "முத்தமிழ்க் கலா வித்வரத்தினம்" ஆகிய, திரு. சண்முகம் அவர்கள் மீது திருவையாறு, ஆசுகவி, கீர்த்தனை அரசு, சித்திரகவிச்சரபம், கணித சோதிட கலாநிதி. P. V. அப்துல் கபூர் சாஹிப், புலவர் அவர்கள் இயற்றியுள்ள "சித்திரகவிமாலை"யைக் கண்ணுற்றேன்; கண்ணுற்று மிக்க வியப்படைந்தேன். இப்புலவரது செய்யுளியற்றுந் திறனும் கூர்த்த அறி வாற்றலையும் அறிதற்கு, இவ் ஓவியப் பாக்கள் ஓர் உரை கல்லாக ஒளிர்கின்றன. ஒவ்வொரு பாக்களும், செய்தற் கரியவைகளாகத் திகழ்கின்றன.

உலகத்தில் பெறலரும் பேறுகளில் புலவர்களாற் பாடப்பெறுதலென்பதும் ஒருவனுக்குச் சீரிய பேருகும். ஒருவன் பிற நெறியாலடையும் புகழெல்லாம் பொன்ற வும், புலவர்கள் தம் பாடலிற் பொதிந்துவைத்த ஒருவர் புகழ் என்றும் பொன்றுது நின்று நிலவும் ஆதலால் புலவர் பாடும் புகழின் மேன்மை அளத்தற்கரியது என்பது அறிஞர்கள் துணிபாகும்.

இந்நூலில் அமைந்துள்ள சித்திரகவிகளிற் பல அணிநூல்களாகிய, தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலியவற்றில் காணப்பெருத புதுமை அமைந்தவை களாகத் திகழ்கின்றன. நாடக அரங்கிலும் திரை ஓவிய அரங்கிலும் சீர்த்த புகழ்பெற்ற, திரு. சண்முகம்

அவர்களை இவ் ஓவியப் பாடல்களால் பாராட்டிப் புகழ்ந் திருப்பது சாலப் பொருத்தமுள்ளதாகும்.

இச் சித்திரப் பாக்களைப் படங்களுடன் அச்சேற்றி வெளியிட்டால் தமிழ் மொழிக்கோர் புதுமையும் தமிழ் கற்போருக்குப் பெரு விருந்துமாக இருக்குமென்பது உறுதி. புலவர் பாடும் புகழைப்பெற்ற கலைப்பேரறிஞர் திரு. சண்முகம் அவர்கள் முத்தமிழ்க் கலைக்கு அளப் பரும் பணியாற்றி, தமிழ்ப் பெருங் கவிஞர்களையும் போற்றி அவர்களுக்கு நல்லாதரவும் நல்கி ஆயுள் நாட்களும் பல்கி வையத்துள் வாழ்வாங்கு வாழத் தடங் கருணைப் பெருங்கடலாகிய இறைவன் திருவடிகளை நினைத்து வழுத்தி வணங்குவோமாக.

இச் சித்திரப்பாக்களை யாத்த' "நாற்பாவரசர்" சித்திர கவிச்சரபம், ஜனுப் P. V. அப்துல் கபூர் சாஹிப். புலவர் அவர்கள் இதுபோன்ற நூல்களாம் அணிகலன்கள் பலவற்றைப் புனைந்து தமிழ்த்தாய்க்கு அணிந்து நீடு வாழ்வாராக.

இங்ஙனம்

அ. கார்மேகக்கோன்

இவற்றின் பின் வருவனவெல்லாம், இந்நூலா சிரியரான P. V. அப்துல் கபூர் சாஹிப், புலவர் பல காலங்களிலும் இயற்றியுள்ள சித்திரகவி, கீர்த்தனை, வண்ணங்கள், நூல்கள் முதலிய வற்றைப் பார்த்து, தமிழ்நாட்டுத் தமிழ்ப் பேரறி ஞர்கள் பல சமயங்களில் பாராட்டிப் புகழ்ந்து அளித்த மதிப்புரைகள் பலவற்றின் சுருக்கத் தொகுப்பாகும்.

1. உயர்திரு மறைமலையடிகள்,
பொதுநிலைக் கழகம், பல்லாவரம்.

ஆசுகவிப் புலவர், திருவாளர். அப்துல்கபூர் சாஹிப் அவர்களைப் பத்தாண்டுகளாக நன்கறிவேன். எத்தகைய செய்யுளும் விரைவில் இயற்றக்கூடிய அரும் புலமை இவர்கள்பால் மிக்கிருத்தல் கண்டு வியப்புற்றேன். இனிச் செய்யுளியற்றுவதிலும் "மிறைக்கவி" என்னும் சித்திரகவி இயற்றுந் திறம் இவர்கள்பால் அமைந்திருத்தல் கண்டு பின்னும் பெரு வியப்புற்றேன்.

பண்டைக்காலத்தில் அரிதினும் அரிதாக இயற்றப் பட்ட மிறைக் கவிகளும் சில; அவற்றை இயற்றிய புலவர்களும் மிகச் சிலரே. இக்காலத்தில் அத்தகைய புலவர் சிலரும் இலராயினர். தமிழ்மொழியானது இத்தகைய செய்யுட்கள் இயற்றுவதற்கு ஏற்ற இடந்தருங் குழைவு உடையதாதல், மிறைக்கவிகளைப் பார்த்தாலல்லது நன்கு விளங்காது. மொழி இடந்தராதபோது புலவர்கள் எத்துணைத் திறம் உடையவராயினும் தமது திறமையை அம்மொழியின்கண் காட்ட இயலாது. இப் புலவரவர்களின் கவித்திறமையான்து தெற்றெனவிளக்குதற்குத் தமிழ்மொழி இடந்தருவதும் இவர்தம் செய்யுட்களால் நன்கு விளங்காநிற்கிறது. ஆகவே தமிழ் மொழியின் ஏற்றம் அறிதற்கும், இவர்தஞ் சித்திரகவிப் புலமை துணை செய்தல் கண்டு மகிழ்கின்றேன். இவர் தம் கவிகளைப் பயில்வோர், இவர்தந் திறமையையும் நந்தாய் மொழியாகிய தமிழின் விழுமிய தன்மையும் உணர்ந்து களிப்புறுவார்கள் என்று நம்புகிறேன்.

இங்ஙனம்

மறைமலையடிகள்

2. உயர்திரு திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
சாது அச்சகம், ராயப்பேட்டை.

நம் முன்னோர்கள் கண்ட பாட்டமைப்புக்கள் பல திறத்தன. அவைகளுள் ஒன்று சித்திர கவி. இக்கவி பாடுவதிலுள்ள அருமைப்பாடுகள் அத்துறையில் இறங்கி உழைப்பவர்க்கே நன்கு தெரியும். தமிழ் வளம் பெருகியுள்ள அந்நாளிலேயே, சித்திரகவி பாடப் பலர் முயல்வதில்லை. தமிழ்வளம் அருகியுள்ள இந்நாளில் சித்திரகவி திறம்படப் பாடும் ஒருவருளர். அவரை ஈன்ற தமிழ்த்தாய் வாழ்க! அவ்வொருவர் யாவர்? பெரிய தாராபுரப் புலவர் ப. வெ. அப்துல் கபூர் சாஹிப். இப்புலவரின் உழைப்பு இவர் இயற்றிய சித்திரகவிகளில் தேங்கிக்கிடக்கிறது. அது புலமை உலகுக்கு விருந்தாகுமென்பதில் ஐயமில்லை. புலவர் நீடினிது வாழ்வாராக.

இங்ஙனம்
திரு. வி. கலியாணசுந்தரன்

3. நாவலர். பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள். கரந்தைப் புலவர் கல்லூரி. தஞ்சை

ஆசுகவி. கீர்த்தனை அரசு. சித்திரகவிச் சரபம்' கணித சோதிட கலாநிதி. P, V. அப்துல்கபூர் சாஹிப் புலவரவர்கள், சித்திரகவிகள், கீர்த்தனைகள், வண்ணங்கள் இயற்றுவதில் மிகவும் தேர்ச்சிபெற்றவர்கள். தமிழ் நாடு தோன்றிய காலந்தொட்டு இவர்கள்போல் சித்திர கவி பாடினவர்கள் ஒருவருமிலர். இவர்கள் ஆசுகவியாக விரைந்து பாடும்பொழுது முருகப் பெருமானருளாலேயே இங்ஙனம் பாடுகின்றாரென்று தோன்றும்.

இங்ஙனம்
ந. மு. வேங்கடசாமி நாட்டார்

4. இளசைகிழார். பெருநாவலர்.
ச. சோ. பாரதியாரவர்கள். பசுமலை, மதுரை.

சித்திரகவி என்றாலே தமிழர்களுக்கு வியப்பும் வெறுப்பும் உண்டாவதியல்பு. ஏனெனில், சித்திரகவிகள், சொன்னயம். பொருணயமின்றி அசைச் சொற்கள் புணர்ந்து ஒரு தமிழ்ப் புதர் போலிருக்கும். அக்கருத்தைப் பொய்யாக்கி நமது சித்திர கவிச்சரபம் ஜனாப் P. V. அப்துல்கபூர் சாஹிப் புலவரவர்கள், தானியற்றிய சித்திரகவிகளைச் சொன்மணமலரும் பொருட்பழச்சுவையும் விளங்கிய இளந்தோப்பாக மிளிரச் செய்திருக்கிறார்கள் என்பது மிகையாகாது. இப்புலவர், கஞ்சிக்கு வஞ்சிபாடும் பஞ்சைப்பாவலர் அல்லர்; வினாடியைந்தில் செயற்கரியதென நாம் நினைக்கும் கவிகளை விரைந்து பாடும் பெற்றியுடையவர். ஒரு பாட்டை எழுதிப் பல தடவை அழித்துத்திருத்தும் புதுப் புலவர்கள் பேதைமை ஒழிய, எளிதில் விரைவில் இலக்கணமுறை வழாஅது கவியியற்றும் பாரங்குதர் நம்புலவர். கணித சோதிட நூற்கணக்காயர். சிறந்த இயற்பாவலர். இவர்களோடு பல்லாண்டுகளாகப் பழகிய யான், இவர்கள் செய்துள்ள நூல்கள் பலவற்றையும் பார்த்துள்ளேன். அவைகளெல்லாவற்றினும், இவர்கள் கீர்த்தனை சாலச் சிறந்ததாகும். அதனாலேயே கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் இப் புலவருக்குக் "கீர்த்தனை அரசு" என்ற சிறப்புப் பட்டம் கொடுத்துள்ளனர். இவர்கள் கீர்த்தனையைக் கேட்டால், பொழுதுபோவதே தெரியாமல் எத்தனை வேலைகளிருப்பினும் மறந்து மனமானது இவர்கள் கீர்த்தனைகளில் ஈடுபட்டுவிடும். அவ்வளவு பொருட்சுவை மலிந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

இங்ஙனம்
இளசைகிழான். ச. சோ. பாரதி

5. மகாமகோபாத்யாய. முதுபெரும்புலவர், சைவ சித்தாந்த வித்தகர், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரவர்கள்.

ஆசுகவி, கீர்த்தனை அரசு, சித்திர கவிச்சரபம், கணித சோதிட கலாநிதி P. V. அப்துல்கபூர் சாஹிப் புலவர் அவர்கள்சித்திரகவி இயற்றும் திறமை மகிழ்வும் வியப்பும் உண்டாக்குகின்றன. சித்திரகவியில் சொல் முடிவு, பொருள் முடிவு மிகவும் இனிமை பயக்கின்றன. இவர்கள், நாற்கவியும் நலனுறப்பாடும் பெற்றி வாய்ந்தவர். பல நூல்களுக்கு ஆசிரியர். கணித சோதிட ஆராய்ச்சிவல்லுநர். "திருமுருகாற்றுப்படையை உருவோதித் தெய்வவாக்குப் பெற்றவர் என்பது இவர்களோடு பல்லாண்டுகளாகப் பழகிய யான் கண்டறிந்த உண்மை. புலவர் நீடினிது வாழ்ந்து தமிழன்னைக்கும் தமிழ் நாட்டுக்கும் இவர்தம் பாடலாற் பணிபுரிய வேண்டுமென்று இறைவனிணையடிகளை இறைஞ்சுகிறேன்.

இங்ஙனம்
மு. கதிரேசன்
அண்ணமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்

6. சேது சமஸ்தானம், ரா. இராகவய்யங்காரவர்கள்

மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையில் இப்புலவரைக் காணும் பாக்கியம் கிடைத்தது. தமிழவேள் உமா மகேஸ்வரன் பிள்ளையவர்களும், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரவர்களும், இப்புலவர், மதுரைத் தமிழ் சங்கத்தில் "ஆசுகவி" என்ற பட்டம் பெற்றவர் என்று வாயாரப் புகழ்ந்து பேசினர்கள். அது கேட்ட யான், "ஆசுகவி என்பது, காளமேகப் புலவருக்கமைந்த

பட்டமல்லவா? காளமேகம் போல இவர் பாடுவாரா?" என்றேன். அவை காதில் விழுந்தவுடன் நமது ஆசுகவி அப்துல்கபூர் சாஹிப் அவர்கள் என்னை நோக்கி, ஏன் உங்களுக்கு ஐயுறவு? எந்தக் கவிபாட வேண்டுமென்று கேட்டார்? காளமேகம், 12. ராசியும் வரிசையாக வைத்து, தளைதட்டாமல் வெண்பா இயற்றி யுள்ளார். அதுபோல நீரும் ஒருவெண்பாப் பாடுங்க ளென்றேன். அதற்கு இப் புலவர் கூறியது. ஒரு வெண்பாவில் 15. சீருளது. 12. ராசியை அமைத்துக் காளமேகம் பாடியது பெரிதல்ல. நான் ஒரு குறள் வெண்பாவில் 7. சீருக்குள், 12. ராசியும் அமைத்துப் பாடுகிறேன் பாருங்கள் என்று உடனே அங்கு குழுமி யோர் அனைவரும் ஆச்சரியப்படும்படி,

ஆடுசே வீணை அலவனரி பெண்டுலைதேள்
நீடுவிற்சு ருக்குடமீ னே—என்று

ஒரு குறள் வெண்பாவாற் பாடினர். அப்பொழுது யானடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. பின்பு, இவர் இயற்றியுள்ள, ஒற்றெழுத்தில்லா, இ ர ா ம ா ய ண ம், வண்ணங்கள், கீர்த்தனைகள், சித்திரகவிகள் முதலிய வற்றைக் கேட்டு மகிழ்ந்து நந்தமிழ் நாட்டின் தலை சிறந்த புலவர் இவர் ஒருவர்தான் இருபதாம் நூற்றாண் டில் வாழ்கிறாரென்று களிபேருவகையுடன் மதிப்புரை எழுதியளித்தேன்.

இங்ஙனம்

ரா. ராகவய்யங்கார்

ஆடு - மேடம். சே - எருது, ரிஷபம். வீணை – மிதுனம். அலவன் - நண்டு, கற்கடகம். அரி - சிங்கம். பெண் - கன்னி. துலை - துலாம். தேள் - விருச்சிகம். வில் - தனுசு. சுறு - மகரம். குடம் - கும்பம். மீன் - மீனம்.

7. சேதுசமஸ்தானம். மு. ராகவய்யங்கார் அவர்கள் திருவனந்தபுரம் யூனிவர்ஸிடி.

அரசர், தலைவர் முதலியோரைப் பாடிப் பரிசில் வேண்டிவரும் புலவர் பலரை, இராமநாதபுரத்தவனுன நான் நன்கறிவேன். சித்திர கவிகளின் மதிப்பைப் புலவர்கள் சிறுகச் செய்துவருகிருர்கள் என்று எண்ணி நான் வருந்தியதுண்டு.

அவ்விதம் எண்ணியிருந்த எம்மனேரது எண்ணங் களை முழுதும் மாற்றி மகிழ்வூட்டினவர் நமது ஜனுப் P. V. அப்துல் கபூர் சாஹிப், புலவரவர்கள் தான். முதலில், ராமநாதபுரம் அரசர்மீதும் இரண்டாவதாகத் திரு வனந்தபுரத்தில், பிரும்ம ஸ்ரீ (சசிவோத்தம) டாக்டர் சர். சி. பி. இராமஸ்வாமி ஐயரவர்கள் மீதும், இயற்றிய, சித்திரகவிகளைப் பார்த்துப் பெருமகிழ்வெய்தி, இரண் டுக்கும் மதிப்புரை எழுதியுள்ளேன். (இச் சித்திரகவி ரத்தினத்தை) தமிழர்கள் போற்றுவது கடமையாகும்.

இங்ஙனம்

மு. ராகவய்யங்கார்

திருவனந்தபுரம் யூனிவர்ஸிடி

8. மதுரை நான்காந்தமிழ்ச் சங்கத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்

திரு. நாராயண ஐயங்காரவர்கள்.

ஆசுகவிப்புலவர் ஜனுப் P. V. அப்துல்கபூர் சாஹிப் புலவரவர்கள், ஸ்ரீமத் ராமாயண ஒற்றெழுத் தில்லாத வண்ணத்துடன் பல சித்திர கவியும் பாடிவந்து என்னிடம் மதிப்புரை கேட்டார். நான் சோதிக்க வேண்டி, இப்புலவரிடம் ஈற்றுக்கள் கொடுத்து, வெண்

பாப் பாடும்படிக்கும், பாகவதவண்ணம் பாடவும் சம்பூரண ராமாயணக் கீர்த்தனே, திருவேங்கட மகத்துவம், ஆழ்வாராதியர் கீர்த்தனே முதலிய பலவற்றைப் பாடும்படி கேட்டேன். இவர்கள் சிறிதும் அஞ்சாமல் யான் கேட்ட, ஒவ்வொன்றையும் தமிழ் நாட்டவருக்குப் பயனளிக்கவும் மகிழ்வூட்டவும் என்றும்நிலேபெற்று விளங்கவும் உரித்தாகிய பாடல்களேப் பாடினுர். யான் பெரு மகிழ்வெய்தி தமிழ் நாட்டில் அரிய கவிகளேப் பாடுவோர் இவரைப்போல யாண்டும் காணவியலாது என்று இரும்பூதெய்தி, எனது மதிப்புரைகளே வழங்கியுள்ளேன். இப்புலவரவர்கள் தமிழ்த்தாய்க்கு இவர் மனத்திலுதயமாகி வாக்கில் வரும் பாடல்களே நூல்களாக்கி அணிவித்து நல்லவளத்தோடு நீடினிதுவாழ எல்லாம்வல்ல ஸ்ரீயப்பதியை இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்

திரு. நாராயணய்யங்கார்
மதுரை. நான்காந்தமிழ்ச்சங்கம்

தாகூர் சட்ட விரிவுரையாளர்.
9. கா. சுப்பிரமணியபிள்ளேயவர்கள்
அண்ணுமலே யூனிவர்ஸிடி.

ஜனுப் P. V. அப்துல்கபூர்சாஹிப் புலவரவர்கட்கு பெரிய சங்கங்களிலிருந்து ஆசுகவி கீர்த்தனே அரசு சித்திரகவிச்சரபம், கணிதசோதிட கலாநிதி என்ற பட்டங்களே அளித்துள்ளதற்கு ஏற்ப, இவர்கள் பல சமய ஆராய்ச்சி செய்து அந்தந்தச் சமயக் கடவுளர்களேயும் பாடிச் சிறப்பித்திருப்பது இவர்களின் பொது நோக்குடைமையைப் புலப்படுத்துகின்றது. இவர்கள் கீர்த்தனேகளேக் கேட்டு, இவர்கள் போலக் கீர்த்தனே

களில் எதுகைமோனை அடுக்குத்தொடர்கள் மடக்குகள் முதலியன அமைத்துப் பாடும் புலவர்கள் இன்று தமிழ் நாட்டிற் காண்பதரிதென நினைத்தேன். அத்துடன் இவர்கள் சித்திரக் கவிகளைப் பார்த்து, இதுவரை தமிழ் நாட்டில் எவரும் இத்தகைய கவிகளியற்றவில்லை, என்று நினைத்து அளவிலா மகிழ்ச்சியடைந்தேன். புலவர் தமிழன்னைக்கு இவர்கள் கவிமாலை பலவற்றை அணிந்து நீடினிது வாழ்வாராக.

இங்ஙனம்

கா. சுப்பிரமணியபிள்ளை

10. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையவர்கள்

புத்தேரி

ஆசுகவி, கீர்த்தனை அரசு, சித்திரகவிச்சரபம், கணிதசோதிட கலாநிதி, ஜனாப் P. V. அப்துல்கபூர் சாஹிப், புலவர் அவர்களுடைய தரிசனம் இன்று கிடைக் கப்பெற்றேன். அதனால் அழியாப் பேறு அடைந்தேன். அவர்கள் ஒரு அருட்கவி என்பதை அவர்கள் பாடலைக் கேட்ட அனைவரும் எளிதில் உணர்ந்துகொள்வார்கள்

சித்திரகவி பாடுகிறவர்கள் பதங்களைச் சித்திரவதை செய்கிறார்கள். இவர்கள் இயற்றிய சித்திர கவிகளில் அவ்வித "வதைகள்" ஒன்றும் காணப்படாதது போற்று தற்குரியது. இவர்கள்போல் சித்திரக்கவி பாடுவோரை நான் பார்த்ததே இல்லை.

இங்ஙனம்

தேசிகவிநாயகன்

மகாமதி, அல்லாமா, தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், சதாவதானி

11. ஜனுப் ப. செய்குத்தம்பிப் பாவலரவர்கள்

கோட்டாறு

ஆசுகவி, கீர்த்தனை அரசு, சித்திரகவிச்சரபம், கணித சோதிட கலாநிதி ஜனுப் P. V. அப்துல் கபூர் சாஹிப், புலவர் அவர்களை என் வாணுளில் முதன் முதலாகக் கண்ணுறும் பாக்கியம் எனக்குக் கிடைத்தமை குறித்து மிகமகிழ்கின்றேன்.

முஸ்லீம் சமூகத்தில் உமறுப்புலவர். குலாம் காதிறு நாவலர் வண்ணக்களஞ்சியப் புலவர் இவர்களைப் போலத் தமிழ் நாட்டில் ஒருவரும் தோன்றவில்லையே என்று நான் சிலசமயம் எண்ணி வருந்தியதுண்டு, ஆண்டவனருளால் இப்புலவரைக் காணப்பெற்றதும், அவர்கள் கீர்த்தனைகளைக் கேட்டதும், சித்திர கவிகளைப் பார்த்ததும், எனது கண்களும் மனமும் செவியும் ஒருங்கே களிப்புற்று, நம் சமூகத்தில் ஒப்புயர்வற்ற கவிகளியற்றுவோர் ஒருவருளர் என்று மனது களிபே ருவகை கொண்டன. இவர்களைப்போலச் சித்திரக் கவிகள் பாடும் புலவரை என் வாணுளில் பார்த்ததே இல்லை. அல்லாவினருளால் எல்லா நலனும் பெற்று புலவர் நீடு வாழ்வாராக.

இங்ஙனம்

ப. செய்குத்தம்பி—கோட்டாறு

12. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் (ஞானியார் சுவாமிகள்

திருப்பாதிரிப்புலியூர் மடாலயம்

நான் பழனிக்குப் போகும் நோக்கத்துடன், திருச்சி மலைக்கோட்டையில் தங்கினேன். அவ்வமயம் ஜனுப் P. V. அப்துல்கபூர்சாஹிப், புலவரவர்களைக் காணும் பாக்கியம் கிடைத்தது. இவர்கள் இயற்றியுள்ள ஒற்றெழுத்தில்லாத இராமாயண வண்ணம், பாகவதவண்ணம், சீருத்திருப்புகழ், சுராபான நிவாரணி, வைஷ்ணவ சைவ, மகமதிய சமயக் கீர்த்தனைகளும், புலவரவர்கள் பாடக்கேட்டு ஆனந்த பரவசமடைந்தேன். அவர்கள், சித்திரகவிகளைப் படித்துக்காட்டினுர்கள். அதைக் கண்டவுடன் உலகம் தோன்றிய நாளிலிருந்து இது வரை யாரும் செய்திராத அதிசயமமைந்த சித்திரகவிகள் இதுவெனப் பெருவியப்புற்றேன். இவர்கள் ஒரு அருட் கவியென்று எண்ணினேன். எண்ணியதற்குச் சான்ருக இவர்கள், திருமுருகாற்றுப்படை, ஓதக்கேட்டுத் தமிழ்க் கடவுளாகிய முருகவேளருள் பெற்றவரென்று அறிந்தேன். இப்புலவரையீன்ற தமிழ்த்தாய் நீடு வாழ்க. இப்புலவர்மணி செவ்வேளருளால் எல்லா நலனும் பெற்று வாழ்வாராக.

இங்ஙனம்

சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

13. மகோமகோபாத்யாய, தாக்ஷிணுத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதய்யரவர்கள்

ஜனுப் ஆசுகவிப்புலவர் அப்துல்கபூர் சாஹிப், அவர்களின் சித்திரகவிகளைப் பார்த்தேன். அவர்களியற்றிய கீர்த்தனை வண்ணங்கள் முதலியவற்றைப் பாடக் கேட்

டேன். மிக்க வியப்பும் மகிழ்வும் அடைந்தேன். தற்போது தமிழ்நாட்டில் கவிபாடும் புலவர்கள் பலரிருப்பினும், இப்புலவரை முதல் வரிசையில் வைக்கத்தகுமென்பது என் கருத்து. என் கருத்து முகமனுகக் கூறியதென்றையுற்ருல் இப்புலவர் கவிகளை நேரிற் கண்டும், கேட்டும், ஐயுறவை அகற்றலாம் என்பதே எனது வேண்டுகோள். எத்தனையோ சித்திரகவிகளை நான் ஆராய்ந்திருக்கிறேன். அவைகளில் பொருள் விளக்கமில்லை. இவர்கள் கவிகள் சொல் பொருள் அருள் பத்தி இலக்கண ஒழுங்குடன் காணப்படுவதால் இவைகள் படங்களுடன் அச்சாகி வெளிவந்தால் பிற்காலத் தமிழ் மாணவர்கள் சித்திரகவிகள் இயற்றத் துணைபுரியுமென்று கருதுகிறேன். தமிழ்ச் செல்வர் இவர் கவிகளை உலகினர் அறியச் செய்வது தமிழுக்கே செய்த பெருந் தொண்டாகுமென எண்ணுகிறேன். புலவர், பல நூல்களியற்றி தமிழன்னைக்குச் சூடி நீடினிது வாழ்வாராக.

இங்ஙனம்

உ. வே. சாமிநாதன்

திருவேட்டீஸ்வரன்பேட்டை, சென்னை.

மற்றும் மதிப்புரை வழங்கியவர்கள்

(சென்னை)

ரா. பி. சேதுப்பிள்ளை

மு. வரதராசனுர்

எஸ். வையாபுரிப்பிள்ளை

(அண்ணுமலைநகர்)

அ. சிதம்பரநாதச் செட்டியார்

வெள்ளைவாரணனுர்

ஔவை. துரைசாமிப் பிள்ளை

(கரந்தைப் புலவர் கல்லூரி)

ஆர். வேங்கடாசலம் பிள்ளை

உலக ஊழியர்

பெரியசாமிப் புலவர்

(திருவையாறு)

இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

அரங்கசாமிப் புலவர்

புருஷோத்தம நாயுடு

ந. மு. வே. நாட்டார் - மகள்

சிவ. பார்வதியம்மாள்

(ஒரத்தநாடு)

வடமொழி ஆசிரியர்

பொன்னுச்சாமி பிள்ளை

பி. டி. வேலாயுதம் பிள்ளை

(கோவை)

சி. கே. சுப்பிரமணிய முதலியார்

அ. வரதநஞ்சைய பிள்ளை

அ. கந்தசாமிப் பிள்ளை

ஐயாச்சாமி பிள்ளை

(திருவிதாங்கூர்)

யூனிவர்ஸிடி

ஏ. எஸ். ரத்தினசபாபதி பிள்ளை

பன்னிருகைப் பெருமாள்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

முத்துச்சாமிக் கவிராயர்

பாலகவி - பூமிபாலகதாஸ்

பாலகவி - வயிநாகரம் ராமநாதன் செட்டியார்

மற்றும் பலர்

கடவுள் வாழ்த்து

எல்லாம்வல்ல ஏகநாயகன் துதி

நிரோட்டம். நிலைமண்டிலவாசிரியப்பா

1. சீரார் செகத்திற் றிகழ்சரா சரத்தைத்
தேரார் கரத்தாற் செய்தளித் தாண்ட
தண்ணளித் தடங்கடற் றனியிணை யடிதனை
எண்ணி ஏத்தி இறைஞ்சினன் சித்திரம்
சேரணி இலக்கணம் செழித்திட யானே.

நிரோட்டமென்பது. நிர் – இல்லாது. ஓட்டம். உதடு- உதடு அசையாமறபாடுவதாம்.

பதவுரை

சீர் - சகல நன்மைகளும் - ஆர். நிறைந்துள்ள -செகத்தில் உலகத்தில் – திகழ் - பிரகாசிக்கும் - சரம் - அசையும் பொருள் – அசரம் - அசையாப்பொருள்களை - செய்து - படைத்து - அளித்து - காத்து. ஆண்ட - ஆட்கொண்ட - தண் - குளிர்ந்த - அளி - அருளாகிய - தடம் - விசாலமான - கடல். சமுத்திரமாகிய - தனி - ஒப்பில்லாத முழுமுதற் கடவுளின் - இணை - இரண்டு - அடிதனை திருவடிகளை. எண்ணி - நினைத்து - ஏத்தி - வாயால் துதித்து - இறைஞ்சினன் - வணங்குகின்றேன் (ஏனெனின்) சித்திரம் -ஓவியம் - சேர் - சேர்ந்த - அணிஇலக்கணம் - சொல்லணி இலக்கணம் - செழித்திட தழைத்திட - யான் - நான் (சொல்லணி யிலக்கணம் தழைத்திட நான் வணங்குகிறேன். என முடிக்க.

நடராசப் பெருமான் துதி

நிரோட்ட வோட்டியம், அளவடிவிருத்தம்

2. புதுமுரு குறுமொரு பொதுமுது குழுவொடு
நதிசசி யகிசடை யசைதர நனிநடி
பொதுமுழு வுருவுளு முறுமொரு குருவுரு
நிதியர னிணையடி தலைதனி லணிகநீ.

நிர். இல்லாதது. ஓட்டம். உதடு - ஓட்டியம் - உதடு உடையது. அதாவது, ஒரு அடி, உதடு குவியும்படியும். ஒருஅடி. உதடுவேலை செய்யாமலும் பாடுவதாம்.

பதவுரை

புது - புதிய – முருகு - வாசனை - உறு - பொருந்திய - ஒரு - ஒப்பில்லாத - பொது - சிற்சபையில் (எப்போதும் அகலாத) முது - பழைமையாகிய - குழு கூட்டம் (நந்தி, விட்டுணு. பிருங்கி வியாக்கிரபாதர்) முதலிய கூட்டத்தில்- நதி - கெங்கை - சசி. சந்திரன் – அகி - பாம்பு (இவைகள் சடை - சடாபாரத்தில் - அசைதர - அசைந்தாடும்படி - பொது – நடுநிலையாக – நனி. மிகுதியாக நடி. நடிப்பவரும் (முழுஉரு - முழுஉருவைப் பெற்ற சகல சீவான்மாக்களின் - உள்உறும் - மனத்தில் பொருந்தியிருப்பவரும் ஆகிய - ஒரு குருஉரு – ஒப்பிலாத ஞானகுருவுருவாகிய - நிதி - ஞானிகளுக்குச் செல்வமாகவுள்ள - அரன் - சிவபெருமான் - இணையடி - இரண்டுதிருவடிகளை - தலைதனில் அணிகநீ நீதலையில் அணிந்துகொள்வாயாக. (எல்லாச்சீவர்களின் மனத்திலுறைபவனும் பழைமையான கூட்டம் நிறைந்த சிற்சபையில் நடனமிடுவோனுமாகிய சிவபெருமானடிகளைத் தலையிலணிவாயாக என முடிவுசெய்க.

பராசத்தி துதி—மாலைமாற்று

இன்னிசைவெண்பா

3. காவா ரிமாமக வானமா காமாரி
நாவேதே மாகவிக ளேதாதா மாதாதா
ளேகவிக மாதேவே நாரிமா காமான
வாகம மாரிவா கா.

மாலை மாற்றென்பது. ஒரு செய்யுளை - முதலிலிருந்து வாசிப்பதுபோலவே, செய்யுளின் கடை சியிலிருந்து வாசித்தாலும். அச்செய்யுளே வரும்படியாக அமைப்பதாம்.

பதவுரை

கா - சோலைகள் × ஆர் - நிறைந்துள்ள × இமா - இமய மலையரையன் × மகவு ஆன - மகளான × மாகாமாரி-பெருமையான காமாரி என்னும் நாம முள்ளவளே × நாவே - எனது நாவில் × தே-தெய்வத்தன்மை பொருந்திய × மாகவிகளேதா - பெருமையான கவிகளைத் தரவேண்டும் × தாமா - தாமம் என்னும் முடிதரித்தவளே × தாதாள் - உன்பாத சேவைதர வேண்டும் × ஏக இகம். ஒன்ருகிய இவ்வுலகுக்கு × மாதேவே - பெரியதெய்வமானவளே × நாரி - நாரி என்னும் நாமம் பெற்றவளே × மா - பெரிய × கா - கற்பகம் × மான – போல × ஆகமம் - சைவாகமங்கள் போற்றும் × மாரி - மாரியென்னும் நாமம் பெற்றவளே × வாகா - வந்துகாக்கவேண்டும் என்பதாம் × ஆகமமாரி - என்பதற்கு. ஆகமங்கள் என்னும் பயிருக்குமேகம்போன்றவளே, என்றும் பொருள்கொள்ளலாம்.

காமாரி - நாரி. மாரி, என்னும் நாமம்பெற்றதாயே. தெய்வீகமான கவிகள் என்நாவில் உதிக்கும்படி வந்து சேவை காட்டி அருள்வாயாக எனமுடிவுசெய்க.

மாவிஷ்ணுதுதி, நிரோட்டவோட்டியம்

(நேரிசைவெண்பா)

4. மாக மழைவண மாக மரைமாதா
வாக மணிமுடிவான் மீனமென—வாகவணி
மாதவா காவலா வாகவிதை பாடவணி
போதமே தாமாரி போல்.

இச்செய்யுள் - ஒரு எழுத்து. உதடுவேலை செய்யவும். அடுத்த எழுத்து உதடுவேலை செய்யாமலும். வரிசையாக. அமைத்திருப்பதறிக.

பதவுரை

மாகம் - ஆகாயத்திலுள்ள × மழை வண்ணம் ஆக-மேக நிறமாக × மரைமாதா - தாமரையில் வசிக்கும் இலக்குமி மாதா × ஆகம் - மார்பிற்பொருந்த × மணிமுடி - துளபமணி யாலான முடியானது × வான்மீனம் என ஆக - வானத்தி லுள்ள நட்சத்திரக் கூட்டம் போலப் பிரகாசிக்க × அணி• அழகுபொருந்திய × மாதவனே × காவலா. உலகைக் காக் கும் தெய்வமே × வா. என்னிடம் வரவேண்டும் × அணி கவிதைபாட-வரிசையாகக் கவிகளை யான்பாட × மாரிபோல் மேகம்போல × போதமேதா - ஞானபோதத்தைத் தர வேண்டும் என்பதாம் வரவேண்டும் ஞானபோதம் தர வேண்டும் என முடிக்க.

இலக்குமிதுதி—நிரோட்டம்

நேரிசைவெண்பர

5. ஆரணங்கள் தேடி அறிதற் கரிதான
நாரணனூர் நெஞ்சில் நடிக்கின்ற—காரணியே
ஆக்கனற் ருயே அடியேன் தரித்திரத்தை
நீக்கி நிதிதந்தாள் நீ.

நிரோட்டம் உதடு அசையாமற் பாடுவதாம்.

பதவுரை

ஆரணங்கள் - வேதங்கள். தேடி அறிதற்கு - தேடி அறிவதற்கு. அரிதான நாரணனுர் - அரியவரான நாராயண னின். நெஞ்சில் – மார்பில். நடிக்கின்ற காரணியே - நடனஞ் செய்யும் பிரதானமானவனே. ஆக்கநல் தாயே - செல்வ மாகிய நல்ல மாதாவே - அடியேனுடைய வறுமையை நீக்கி. நிதிதந்து ஆள்நீ – நீ செல்வந் தந்து ஆட்கொள்வா யாக. என்பதாம்.

கணபதி துதி—திரிபங்கி

(கட்டளைக் கலித்துறை)

6. கணபதி யேகற்றைக் கிம்புரி யாய்துதிக் கைப்பரனே
குண நிதி யேஒற்றைக் கொம்புடை யாய்மதக்
குஞ்சரமே
கணமிறைப் பாமுற்றப் பண்பு னேகதிக் கற்பகமே
துணைவரு வாய்பற்றிக் கும்பிடு வேன் துதிப்
பன்கழலே.

திரிபங்கி என்பது ஒரு செய்யுளை மூன்ருக்கிக் காட்டுவது

வஞ்சிவிருத்தம்

1	2	3
கணபதியே	கற்றைக்கிம் புரியாய்	துதிக்கைப் பரனே
குண நிதியே	ஒற்றைக்கொம் புடையாய்	மதக்குஞ் சரமே
கணமிறைப்பாத்	முற்றப்பண் புடனே	கதிக்கற் பகமே
துணைவருவாய்	பற்றிக்கும் பிடுவேன்	துதிப்பன் கழலே

பதவுரை

கணபதியே - பதினெண்கணங்களுக்கும் தலைவனே. கற்றை – பிரகாசமான. கிம்புரியாய் – கிம்புரியென்னும் முடிதரித்தவனே. துதிக்கைப்பரனே - தும்பிக்கையுள்ள பரமனே. குணநிதியே - குணமாகிய செல்வமுள்ளவனே. ஒற்றைக்கொம்புடையாய் - ஒரு கொம்புள்ளவனே. மதக் குஞ்சரமே - மதம்பொருந்திய யானைமுகம் பெற்றவனே.

கணம் - விரைவாக. மிறைப்பா - சித்திரகவி. முற்ற - பூரணமடைய. பண்புடனே - நின்பெருமையான குணத்தோடு. கதிக்கற்பகமே - கற்பகத்தருவைப்போல மோக்கமளிப்பவனே. துணைவருவாய் - எனக்குத் துணையாக வர வேண்டும். கழல் - நின்வீரக்கழலணிந்த பாதத்தை. பற்றி - நினைத்து. துதிப்பேன் கும்பிடுவேன் - வாயாற் றுதிசெய்து வணங்குவேன் - என்பதாம்.

கலைமகள் துதி—குற்றெழுத்துச் செய்யுள்

(சந்தவிருத்தம்)

7. சரசுவதி யெனவுலகு புகழவணி தமிழுலகி
லரசுபுரி சுகுணவதி தவளவண முறுமழகி
பிரமனொரு சதிதிருவி னருமருகி யெனதுகவி
பரவியுல கறியநல வரமருளு மதிவதனி.

பதவுரை

சரசுவதியென்று உலகினர் புகழ்கின்ற. அணி - அழகிய. தமிழுலகில் அரசு புரிகின்ற பரிசுத்தமான குணவதியே. தவளம் வண்ணம் - வெண்மையான நிறம். உறும் அழகி - பொருந்திய அழகுள்ளவளே. பிரமனுடைய ஒரு - ஒப்பில்லாலத. சதி - மனைவியே. திருவின் - இலக்குமியின், அருமருகி - அருமையான மருமகளே. என்னுடைய கவிகள் உலகெலாம் பரவி அனைவரும் அறியும்படியாகவரம் தரவேண்டும் மதிவதனி. சந்திரன்போன்ற முகத்தையுடையவளே - என்பதாம்.

முருகன்துதி—வல்லினப்பாட்டு

(நேரிசைவெண்பா)

8. பத்திகொடு பாடு குறத்தி பதிபதத்தைச்
சித்தத் துறப்பதித்துப் போற்றிடு—சித்திபெற்றுத்
தேசு செகத்தே சிறக்கத் துறக்கத்தே
கூசிடா தேகு குடி.

பதவுரை

குறத்தி பதியாகிய முருகன் திருவடியை சித்தத்திற் பொருந்தப் பதித்துப் பத்தியோடு அவன் புகழைப் பாடு. போற்றிடு. அதனுல் நீ சகல காரியமும் சித்தி பெறுவதோடு செகத்தில் அழகு பிரகாசிக்க விருந்து - மறுமையில் துறக் கத்தே - மோட்சத்தில். கூசிடாமல் குடியாக விருக்கச் செல்வாய் - என்பதாம்,

தமிழர்கள் வழிபடும் மும்மூர்த்திகள். அவர்கள் மனைவிகள், கணபதி முருகன்.

(எண்மர் துதி—நேரிசைவெண்பா)

9. அத்திமுகன் அத்திபதி அத்தியுற்ருேன் அத்தி
பெற்ருள்
அத்தியுரித் தத்திபுனை தத்திசிலைக்—கத்திகன்னல்
ஈந்தவன்பூ வாணியிறை எண்மரையும் போற்றியும்
நெஞ்சே
நீந்துபவ சாகரத்தை நீ.

பதவுரை

அத்திமுகன் - யானைமுகப் பிள்ளையார். அத்திபதி - தெய்வ யானையின் மணவாளன் (முருகன்). அத்தி உற்ருேன் - சமுத்திரத்தில் பொருந்தியவன் (திருமால்). அத்தி உரித்து (கயமுகாசுரனை). உரித்து அத்திபுனைந்து - எலும் பாபரணந் தரித்து. மதுரையில் அத்தி சிலைக்கு-யானையாகிய சிலைக்கு - கல்லானைக்கு. அத்திகன்னல் - அ-அழகிய - தி- மதுரமான. கன்னல் - கரும்பை. ஈந்தவன் - உண்ணும்படிக் கொடுத்தவன் (சிவன்). பூ - இலக்குமி. வாணி - சரஸ்வதி. இறை - பிரமன் ஆகிய எண்மரையும் போற்றி நெஞ்சே பவசாகரத்தை நீ, நீந்திக் கடப்பாயாக என்பதாம்.

மாணிக்கவாசகர் துதி - நேரிசைவெண்பா

மடக்கு

10. வாசகமே மாணிக்க மாப்பாறேன் மாணிக்க
வாசகத்தே வாநீதா வாசகத்தே—பேசவணி
ஓவியப்பா வென்னுவால் ஓவியப்பா வோதிடக்காத்
தாவரம் நேர்தா வரம்.

இதில் 1–வது அடியில் 2·4 சீரும். 2-வது அடியில் 1·3 சீரும். 3-வது அடியில் 1·3 சீரும். 4-வது அடியில் 1·3 சீரும் மடக்கி வருவதறிக.

பதவுரை

மாணிக்கவாசகத் தேவா நினது மொழியானது-மாண் – மாட்சிமையான. இக்கு - கருப்பஞ்சாறு. அம் - அழகிய. ஆப்பால் - பசுவின்பால் தேன்போன்றது. நீதா - நீதியுள்ளவரே. வா – என்னிடம் வரவேண்டும். சகத்தே – உலகத்தின் கண்ணே. பேச அணி - ஓதும்படி அணியிலக்கணமாகிய. ஓவியப்பா - சித்திரகவி. என் நாவில் – எனது நாவினுல். ஓவியப்பா - ஆச்சரியமும் வியப்பும் உண்டாகும்படி. ஓதிட – நான் பாடுவதற்கு. கா தாவரம் நேர் - கற்பகத்தருவுக்கு ஒப்பாக. தாவரம் - வரம் தர வேண்டும் என்பதாம்.

சம்பந்தர் துதி - இன்னிசைவெண்பா மடக்கு

11. சம்பந்த நாளருள்சேய் சம்பந்த ராகவந்த
அம்பிகை பாலரு வாயரென் பாலரு
நேயமொடு சொல்லணி நேர்பகரச் சொல்லணி
யாயிடுவா யாயிடுமாப் போல்.

இதில் முதலடி 1 3ᵛவது சீரும், 2-வது அடி 3-வது அடிகள் 2-வது 4-வது சீரும் ஈற்றடி. 1-வது 2-வது சீரும் மடக்கிவருதலறிக.

பதவுரை

சம்பு - சிவபெருமான். அந்த நாள் - அக்காலத்தில் அருள் - அருளிய. சேய் – முருகனே. சம்பந்தராகவந்து - ஞான சம்பந்தராகவந்து. அம்பிகை - உமாதேவியின். பாலரு – பாலுண்டு - அந்தப் பாலானது அருத. வாயர் - வாயையுடையவர். என்பால் அரு - என்னிடத்தில் அருத. நேயமொடு - நட்போடு. சொல்லணி - சொல்லணி இலக் கத்தின். நேர் பகர - ஒப்பாக. யான்பாட. சொல் அணி யாய் இடுவார் - மொழிகளை வரிசையாகத் தருவார் (எவ் வாறெனின்) யாய் - தாயார். இடுமாப்போல் - தன் குழந் தைக்குக் கொடுப்பதுபோல என்பதாம்.

திருநாவுக்கரையர் துதி

மடக்கு, இன்னிசைவெண்பா

12. கற்றூணிற் கேயலைந்தேன் காவருள்தா
கற்றூணிற்
சுற்றிக்கட் டிக்கடலிற் றள்ளமணர்—சுற்றிக்கட்
டேகவரும் பாவருட்கொண் டேகவரும்
தேப்பாவென்
நாவரைய நாவரைய வா.

இச்செய்யுளில்

1-வது 2-வது அடி சீர். 1. 4-ம் 3-வது அடி. சீர் 1·3-ம் 4-வது அடி சீர். 1·2-ம் மடக்கி வருதலறிக.

பதவுரை

யான் கல்விகற்றும் இதுவரை உணவுக்காகவே அலைந் தேன். என்னைக் காஅருள் தா - காத்து அருள் செய்ய வேண்டும். கல் தூணில் சுற்றிக் கட்டிக் கடலில் தள்ளிய சமணர்கள் சுற்று இக்கட்டு ஏகவரும் - சுற்றிச் சூழ்ந்து செய்த இக்கட்டெல்லாம் தொலையவரக் கூடிய. பா அருட் கொண்டே கவரும் - அருட்பாக்களைக் கொண்டு ஈசனையும் உலகினரையும் கவரச் செய்த. தே – தெய்வமே. பா என் நாவரைய-பாக்கள் என் நாவிலுண்டாகும்படி எழுதுவதற்கு நாவரைய வா - நாவுக்கரசரே வரவேண்டும் என்பதாம்.

சுந்தரர் துதி—நேரிசை வெண்பா—மடக்கு

சுந்தரமே நின்னருட்பாச் சுந்தரமே போலெனக்கு
வந்திடுவாய் சித்திரப்பா வந்திடுவாய்—சந்ததமும்
நாடகமே நாடகமே கொண்டநம்பி சண்முகம்சீர்
பாடகத்தாள் பாடகத்தாள் தா.

இச்செய்யுளில் முதலிரண்டடி. சீர் 1. 3-ம். மூன்ருவது நாலாவதடி சீர் 1-ம், 2-ம் மடக்கி வருதலறிக.

பதவுரை

சுந்தரமே - சுந்தரமூர்த்தி சுவாமிகளே. நினது அருட் பாவின். சுந்தரமேபோல் - அழகைப்போலவே. எனக்கு வந்து இடுவாய் - என்னிடம் வந்து தரவேண்டும். சித் திரப்பா வந்திடுவாய் - சித்திரப்பாக்கள் வரக்கூடிய வாயில். நாடகமே - நாடகத்தமிழால். நாடு அகமே கொண்ட நம்பி – நாட்டவர்களெல்லாம் தங்கள் மனத்திடத்தில் வைத்துப்புகழும் ஆடவரிற் சிறந்தவனுகிய. சண்முகம் சீர் - திரு. சண்முகத்தின் புகழை. பாடு அகத்து ஆள் - பாடக்கூடிய மனத்திலே ஆட்சி புரியக்கூடிய நினது. பாடகத் தாள்தா - பாடகமணிந்த திருவடிச் சேவை தர வேண்டும் என்பதாம்.

முகம்மதுநபி யவர்களின் துதி

(சுழிகுளம்)

வாசிக்கும் முறை நேராக வாசிப்பதுபோலவே 1 நெம்பரில் மேலிருந்து கீழிறங்கி, கீழேயுள்ள 1 நெம்பரில் மேலேறினல், 1-வது அடி சரியாகும். இதுபோலவே நாலடியும் நம்பர்ப்படி வாசித்தறிக.

1	2	3	4				
மு	க	ம	து	வே	தா	தா	தா
க	க	க	தி	தா	வே	நீ	தா
ம	க	வ	க	நீ	பா	வே	தா
து	தி	க	வி	கா	நீ	தா	வே
				4	3	2	1

வஞ்சித்துறை

1. முகமது வேதாதாதா
2. ககக்தி தாவேநீதா
3. மகவக நீபா வேதா
4. துதிகவி காநீதாவே

பொழிப்புரை

திருநபி முகமது (ஸல்) அவர்களே, தாதாவே வானத்திலுள்ள மோக்ஷ வீட்டை அல்லாவிடம் எனக்காகக் கேட்டு வாங்கி கியாமத்து நாளில் நீங்கள் தரவேண்டும். உங்கள் குழந்தையான என் மனத்தில் நல்ல பாடல்கள் உதயமாகும்படி நீங்கள் அருள் தரவேண்டும். யான்பாடிய தோத்திரப் பாவாகிய இதனை நீதியே உருவாகிவந்த நீங்கள் காக்க வேண்டும் என்பதாம்.

நூல் (நெ. 1)

1-வது மலேப்பந்தம், காந்துறைச் செய்யுள்

நேரிசையாசிரியப்பா

1. சீரக மேவிய தென்குமரி யணித்தே
2. நாஞ்சி நாட்டினில் வாழ்மாண் நற்குடி
3. காசினி காக்கும் வேளிர் நந்தமிழ்
4. மரபின் மணியென்ன வந்தனன் மருமலி
5. செந்தமிழ் நாடகஞ் சீர்பெற் ருேங்கவேள்
6. பகவதி யிளவல் பாங்கினில் நடிக்க
7. மன்னு பேருள வளவன் ராச
8. ராசன் மலிகவி ஔவையார் முதலணி
9. வண்பல கூத்துயர் வாகவே அரசனேர்
10. நடிக்கமா நிலமே நயம்பெற மாச்சபை
11. வாழ வானேர் கொடைபொழிந்து முதவி
12. முருகனே யேத்தியே வாய்மை தனமெனப்
13. பொன்னு ரகமுங் கனகம் பொலிய
14. மாரி கவிஞரல் மீள யுத்தி
15. யீகை கருணே யோங்க
16. மங்கள மாக வாழியர் மகிழ்ந்தே.

இச்செய்யுளே மலேயில் வாசிக்குமுறையாவது. 1 நெம்பரிலிருந்து நேராக வாசித்து மேலேறி நேரே வாசித்துச் சிகரத்திலிருந்து நடுவே கீழிறங்கினுல் செய்யுள் முடிவாகும். இச்செய்யுளில் பாட்டுடைத் தலேவன் பெயர் இல்லேயே என்று நினேக்காதீர்கள். பெயர் இருக்கிறது, எப்படியென்ருல், சீரக என்பதில் உள்ள க எழுத்து முதலாக மேலேறிக் கீழிறங்கினுல் ஒரு குறள் வெண்பாவரும். அதில் பெயர் வருவது காண்க.

(குறள்வெண்பா)

கன்ன னுளனே கவியே கவியுகமீ
கன்னனே சண்முகங் காண் — எனவரும்

மலைப்பந்தம்


ம
க ங் யோ
யீ கை கூ ரு ஊண
தி த் ய ள மீ ல் ர
ம் பொ லி ய மா ரி க வி ஒ
க ன க ங் மு க ர ஐ ன் பொ ப்
க ண யே த் தி யே வா ய் மை த ன மை ன
ரு மு வி த மு து ங் ழி பொ டை கொ ர் னே வா ழ
டி க் க மா நி ல மே ந ய ம் பெ ற மா ச் ச பை வா
ந ர் னே ச ர அ வே க வா ர் ய து த் கூ ல ப ண் வ ணி
ள வ ள வ ன் ரா ச ரா ச ன் ம வி க வி ஔ வை யா ர் மு த ல
ரு பே னு ன் ம க க் டி ந ல் னி கி ங் பா ல் வ ள யி தீ வ க ப ன்
ந் த ன ன் ம ரு ம லி செ ங் த மி ழ் நா ட கு ஞ் சீ ர் பெ ற் றே ங் க வே
வ ன ன் யெ ணி ம ன் பி ர ம ழ் மி த ங் ந ர் னி வே ம் கு க் கா னி சி கா டி கு
சீ ர கு மே வி ய தெ ன் கு ம ரி ய ணி த் தே நா ஞ் சி ஞ ட் டி னி ல் வா ழ் மா ண் ந ற்

மலைப்பந்தக்கவி அரும்பதவுரை

1. சீர் அகம் மேவிய - சகல புகழும் தன்னுள் உலவப் பெற்ற. அணித்து - சமீபத்தில். 2. மாண் - மாட்சிமை யான. 3. வேளிர் - வேளாளர். 4. மரபு - குலம். மரு - வாசனை. மலி - மிகுந்த. 5. வேள் - மன்மதன் போன்ற. 6. இளவல் - தம்பி. பாங்கு - பக்கத்தில். 7. மன்னு - நிலைபெற்ற. வளவன் - சோழன். 8. முதலணி - முதலாக அழகிய. வண் - வளமான. நேர் - ஒப்பாக. 10. மாச் சபை - பெரிய சங்கங்கள். 11. வாய்மை - சத்தியம். 13. பொன் ஆர் அகம் - இலக்குமி நிறைந்த வீடு. 14. மாரி – மேகம்போல. அல் - வறுமை.

பொழிப்புரை

உலகப்புகழனைத்தும் தன்னகத்துள் உலவப்பெற்ற கன்னியா குமரிக்குப் பக்கமாகவுள்ள நாஞ்சில் நாட்டில் வாழ்கின்ற மாட்சிமையான நல்ல குடிகளாகிய உலகத்தைக் காக்கும் வேளாளர் குலத்தின் மணியாக அவ தரித்தவன். மணம் மிகுந்த செந்தமிழ் நாடகக் கலையானது புகழ்பெற்றுயரும்படி மன்மதன் போன்ற தனது தம்பி பகவதியென்பவன் தனக்குத் துணையாகப் பக்கத்தில் நடிக்க நிலைபெற்ற புகழ்வாய்ந்த ராசராச சோழன் மிகுதியாகக் கவிபாடி உலகுய்யவைத்த ஔவைப்பிராட்டியார் முதலாகப் பல நாடகங்களை அரசனுக்குச் சமமாக நடிக்கவும், பெரிய உலகத்தினர் பல நன்மை பெறவும், பெரிய சங்கங்கள் பெருகி வாழவும் மேகம் போலப் பொன்கொடை மழை பொழிந்தும், பலருக்கு உதவி செய்தும், முருகக் கடவுளை வழிபட்டு சத்திய நீதியே உலகில் அழியாத திரவியமென்ப துணர்ந்தும், இலக்குமி நிறைந்துள்ள தனது மனையில் செல் வம் பொலிந்து விளங்கவும், மேகம் போலப் புலவரின் வறுமை மீள யுத்தி பண்ணி அதற்குத்தக்க கொடையும் கருணையும் ஓங்க நீடூழிக்காலம் மங்களமாக மகிழ்ந்து வாழ் வாராக என்பதாம். யார் வாழ்வது என்றால் கூறுவேன்.

கன்னன் இப்போது இல்லையே என்று வாடிய புல வனே. கலியுகத்தில் ஈயக்கூடிய கன்னன் ஒருவனிருக் என்றான் அவன் யாரெனில், திரு. சண்முகம். அன்னவனைப் போய்ப்பார் உன் வறுமை நீங்கும் என்பதாம்.

2. மாணிக்கமாலைப்பந்தம் நிலைமண்டிலவாசிரியப்பா

1. சீர்சேர் சண்முகம் சேமமா மணிமழை
2. தருநே ரீகை வாகை தகைமை
3. ஞானம் நீதி யதிபதி கலையே
4. பெருக இகசுகம் பெட்பார் பற்பல
5. பணிபுரி தாசன் சற்சன நேசமன்
6. தென்னன் போலே தமிழிசை திசையிசை
7. பரப்பியே மனைமலி மக்கள் கிளைகள்
8. கனக மோங்க நீடு வாழி
9. வாச வான மாரி மானவே.

இச்செய்யுளை வாசிக்கும் முறை 1 நெம்பரிலிருந்து முறையாக வாசித்தால் 5 வட்டங்களில் நடுநின்ற வட்டத்தின் எழுத்து மும்மூன்ருக வரும். அதுவறிந்து வாசிக்கவும்.

மாணிக்கமாலைப்பந்தம் அரும்பதவுரை

1. சீர்சேர் - புகழ்சேர்ந்த. சேமமா - பெரிய நிதியோடு மணி - சிந்தாமணி. 1. தரு - கற்பகம். வாகை - வெற்றி மாலை. தகைமை - மேன்மை. 4. பெட்பு ஆர் - அழகு நிறைந்த. 5. மன் - அரசன் போன்றவன். 6. தென்னன்- பாண்டியன். இசை - பண். இசை - புகழை. 7. மனை - மனைவி. கிளை - சுற்றம். 8. கனகம் - செல்வம். வாச வானம் - மணந்தங்கிய ஆகாயம் - மாரிமானமேகம் போலச் சுரந்து.

பொழிப்புரை

புகழ் சேர்ந்த திரு. சண்முகம் பெரிய நிதியுடன், மேகம் சிந்தாமணி கற்பகம் போலக் கொடுக்கும் கொடையும், வெற்றி மாலையும் மேன்மையும் ஞானமும் நீதிபதியாகவு

மாணிக்கமாலைப் பந்தம்



முள்ளவன். கலைகளெல்லாம் பெருகவும், உலகில் சுகம் பெருகவும் அழகு நிறைந்த பலப்பல பணிபுரியும் தொண்டனுகவுள்ளவன். சற்சனர்களிடம் நேசமுள்ளவன். அரசனைப்போலும், பாண்டிய மன்னனைப் போலவும் தமிழில் உள்ள பண்களனைத்தும் புகழோடு திசைதோறும் பரப்பி மனைவியும் மலிந்த மக்களும் சுற்றத்தாரும் செல்வமோங்க நீடூழிக் காலமட்டும், தானும் மணங்கமழும் ஆகாயத்திலுள்ள மேகம்போற் சுரந்து வாழ்வானுக என வாழ்த்தியதாம்.

3. சிவலிங்கபந்தம்—நேரிசையாசிரியப்பா

1. மேதினி யோம்பும் வேளிர் குலமணி
2. நீதிசேர் ஞானி நிகரிலாக் கலைமணி
3. பூமி புகழ்மணி பொறுமை யுளமணி
4. வாகு நாடகம் வளம்பெற நடிக்க
5. இசையமு துண்ட சகமிக் கேசரி
6. வாழி நெடிதென வாழ்த்தமன் மதன்போற்
7. புகழ்மணம் வீசப் புலவோர் பாடக்
8. குபேர நிதிகொடை குமண னெனவே
9. மற்புய வாகை சூடிய
10. சற்குணன் டி. கே. சண்முகம் வாழ்கவே.

இச்செய்யுளை 1 நெம்பரிலிருந்து நெம்பர்ப்படி வாசித்து லிங்கத்தின் நெற்றிப்பொட்டிலிருந்து கீழிறங்கினுல் செய்யுள் முடிவாகும்.

சிவலிங்கபந்தம் அரும்பதவுரை

1. மேதினி - பூமி. ஓம்பும் - காக்கும். வேளிர் - வேளாளர். 2. நிகரிலா - ஒப்பில்லாத. 4. வாகு - அழகான. வளம்பெற - வண்மையுயர. 5. இசை - சங்கீதம். சகம் - உலகத்தார். இக்கேசரி - இந்த சிங்கம் போன்றவன் 9. வாகை - வெற்றிமாலை.

பொழிப்புரை

உழவுதொழிலால் உலகத்தைக்காக்கும் வேளாளர் குலமணி. நீதிசேர்ந்த ஞானமும் நிகரில்லாத கலைகள் பயின்றமணி உலகினர் புகழக்கூடிய மணி. பொறுமை மிகுந்த மணியாகிய சற்குணவான் திரு. சண்முகம் அழகிய நாடகக்கலை வளம்பெற நடிக்க அன்னவன் இசையாகிய அமுதத்தைச் செவியாலுண்ட உலகத்தார். சிங்கம் போன்ற இவன் நீடூழி வாழ்வானுக என்று வாழ்த்த, அரசனைப் போலப் புகழ்மணம் திக்கெல்லாம் வீசப்பெற்று புலவோர்கள் பாமாலைபாடக் குபேரநிதியும் கொடையிற் குமணனைப்போல வீந்து மற்புயத்தில் வெற்றிமாலை சூடிய வன் வாழ்வானுக என வாழ்த்தியதாம்.

சிவலிங்க பந்தம்



ச
கு ம ண னெ ன வே ம ற் பு ய வா கை சூ டி யு
டை கொ தி நி ர பே கு க் ட பா ர் வோ ல
ற் பு க ழ் ம ண ம் வீ ச ப் பு
போ ன் த ம ன் ம த த் ழ்
வா ழி நெ டி தெ ன வா
ரி ச கே க் மி
ட ச க
ண்
யு மு து
சை இ க க் டி
ம் வ ள ம் பெ ற ந
க ட நா கு வா ணி ம ள யு
ணி பூ மி பு க ழ் ம ணி பொ று மை
ம லெ க க் லா ரி க நி ணி ஞா ர் சே தி
மே தி ணி யோ ம் பு ம் வே ளி ர் கு ல ம ணி

4. வேலாயுதபந்தம்—நேரிசையாசிரியப்பா

1. வேண கலைவாழ் வேத வாயான்
2. துணைவேந்து சூழ்மணி கிருபை மனதொடு
3. விள்ளொ ணுடக மேவக் கவிமழை
4. தூவி வாசனை தூரம் மலியவே
5. நம்பும் புகழே நாமுறை காவண்
6. சாது ஞானச் சற்குண நீதிக்
7. கேயுரு வேகொண் டிலகு முதாரி
8. தாதா டி. கே. சண்முகம்
9. மனைவி மக்களொடு மகிழ்ந்து வாழ்கவே

அரும்பதவுரை

1 வேண - வேண்டிய. 2 துணைவேந்து - அரசர் போன்ற சகோதரர்கள். 3 விள் ஒண் - மொழியப் பெறும் பிரகாசமான. 5 நா முறைகா - நாவைத் தவருமற் காக்கும். வண் - வளமையான. 7 உதாரி - உதாரகுண முள்ளவன்.

வேலாயுதப்பந்தம் வாசிக்கும் முறை

வே என்னும் 1 நெம்பர் முதலாக மேலேறி வளைந்து வளைந்துநெம்பர்ப்படி வாசித்து உச்சியிலிருந்து கீழிறங்கினுல் பாட்டு முடிவாகும்.

பொழிப்புரை

வேண்டிய பல கலைகளும் சிறந்து வாழக்கூடிய தமிழ் வேதம் தங்கிய வாயை உடையவனும் அரசர்போன்ற சகோதரராற் சூழப்பெற்ற இரத்தினம் போன்றவனும், அனை வரும் மொழிதற்கேதுவான நாடகத் தமிழ் உலகில் பரவ இராகமாகிய கவிமழையைப் பொழிந்து நாடக மணமானது தூர தேசங்களிலும் மலியச்செய்து நம்பக்கூடிய புகழ் பெற்றவனும், நாவை குறை வராமல் காக்கும் வண்மை யுள்ளவனும், சாதுவானவனும், ஞானமுள்ளவனும், சற்குண முள்ளவனும், நீதியை நிலைநிறுத்தவே உருவாகிவந்து பிர காசிக்கும் உதாரமிக்க தாதாவானவனும் ஆகிய திரு. டி. கே. சண்முகம் மனைவிமக்களோடு மகிழ்ந்து வாழக்கடவது எனவாழ்த்தியதாம்.

வேலாயுதப் பந்தம்


தா
ரி தா மு
கொ ண் டி ல கு
வே ரு யு கே க் தி னீ
ஞா ன ச் ச ற் கு ண
து சா ண் வொ கா
நா மு றை
ழே சு பு
வே ந ம் பு ம்
ய வி ம ம் ர
ச ண தூ
வா வி தூ
வி ம ழை
சு க் வ
ட க மே
ஜ ணொ ள்
தொ டு வீ
ன ம பை
ணி கி ரு
ம ழ் சூ
வே ங் து
ண து ன்
த வா யா
வே ழ் வா
ண க ஜ
வே

5. மயில்வாகனப்பந்தம்— நேரிசையாசிரியப்பா

1. தேகந் தேசுள வேளே நம்பி
2. அகமுயர் நிறைமதி முகமலர் வுடனணி
3. நண்ணிசை நாடக மோம்பு வாசவா
4. மாநீ நீடு வாழி கேசரி
5. போற்கெடி யோது போதார்
6. தாதா டி. கே. சண்முக வேந்தே

வாசிக்கும்முறை தே என்னும் எழுத்து முதலாக வாசித்து உச்சியிலிருந்து கீழிறங்கவும்.

அரும்பதவுரை

1 தேசு - அழகுள்ள. வேள் - மன்மதன். நம்பி - ஆண் களிற் சிறந்தவன். 2 அகம் உயர் - உயர்வான மனமுள்ள. மதி - சந்திரன் போன்ற. 3 நண்ணு இசை - நிலைபெற்ற பண்களுடைய. ஓம்பும் - காக்கும். வாசவ-தேவேந்திரன் போன்றவனே. 4 5 கேசரி போற் கெடி ·ஓதுபோதார் - சிங் கம் போன்றவனென்று உலகினரோதும். புட்பம் நிறைந்த மாலையுள்ள.

மயில்வாகனப்பந்தம் பொழிப்புரை

சரீரமானது அழகிய மன்மதன் போன்றவனும்ஆடவரிற் சிறந்தவனும் நிறைந்த மனமும் நிறைந்த பூரணச் சந்திரன் போன்ற முகமலர்வுள்ளவனும், அழகிய நிலைபெற்ற பண்களை யுடைய நாடகக்கலையைக் காக்கும் தேவேந்திரபோகத்தைப் பெற்றவனும், சிங்கம்போன்றவனென்று உலகினர் புகழும் புட்பமாலை நிறைந்தவனும் தாதாவெனப் பேர்பெற்றவனு மாகிய திரு. டி. கே. சண்முகம், நீ பெரிதும் நீடூழிக்காலம் வாழ்வாயாக என வாழ்த்தியதாம்.

மயில்வாகனப் பந்தம்



6. ஏகநாகபந்தம்—நிலைமண்டிலவாசிரியப்பா

1. சண்முக நம்பி சங்கக் கலைக
2. ளோம்பு சதுர னுளமே பத்தி
3. நீதி சேர வளம்பல நீள
4. நாடகம் பலபல நீடு நாற்கவி
5. காத்து மாநீ டூழி வாழி
6. வாகா வோது கோநீ மாண்பே.

வாசிக்கும் முறை, நாகத்தின் தலையிலிருந்து வால்வரை வாசித்தால் பாடல் முடிவடையும்.

ஏகநாகபந்தம் பொழிப்புரை

ஆடவரிற் சிறந்தவனும் அழகாக வசனங்களைப் பேசும் அரசன் போன்றவனும் சங்க நூல்களெல்லாம் காக்கும் உளத்தில் பத்தியும் நீதியும் உள்ள,சதுர்விதப் புருஷார்த்தம். தங்கியுள்ளவனும் ஆகிய திரு. சண்முகம், நீ பல செல்வமும் உயரப் பல நாடங்களையும் ஆசு சித்திரம், மதுரம் வித்தார மென்னும் நாலு கவிகளையும் காப்பாற்றி, பெருமையுடன் நீடூழி வாழ்க என்று வாழ்த்தியதாம்.

ஏகநாக பந்தம்



ல
ல
3 நீ
ப
ல
நீ
ம்
ள
ரு
க
ற்
4 நா
ட
ப
த்
தீ
மே
ம்
சே
ள
னு
ர
வ
வி
து
6 வோ
பி
5 கா
த்
து
கோ
மா
ம்
பு
ச
உ
ளோ
ந
ங்
பூ
டு
நீ
க
ஊ
க
1
த
வா
மா
க்
ண்
மு
பே

7. இரட்டைநாகபந்தம் 1-வது நேரிசைவெண்பா

தண்டமிழ் நாடகத்தின் சற்குரு வுச்சநிலை
எண்டிக்கும் போற்ற எழிலாகத்—தொண்டு
மிகவே புரிவோ னணிவேள் மணிகம்
முகிலைநே ரீகை மொழி.

இரட்டைநாகபந்தவுரைகள்

வாசிக்கும் முறை இரண்டு நாகங்களிலும், தலைமுதல் வால்வரை வாசித்தால் இரண்டு வெண்பா வரும். 2. நாகங்களிலும், நான்கு மூலையிலும் எழுத்து. 5. இரண்டு விலாவிலும் எழுத்து. 5. வாலில் எழுத்து 3. வருவித்து. ஒன்று நேரிசைவெண்பா. ஒன்று இன்னிசைவெண்பாவாக அமைத்துள்ளதறிந்து மகிழ்க.

1 நெம்பர் வெண்பாவுரை

குளிர்ந்த செந்தமிழ் நாடகத்திற்கு சற்குருவும் உச்சநிலையிலிருந்து பணியாற்றுவதை எட்டுத்திக்கும் போற்றிடத் தொண்டு மிகவும் புரிவோனும் அழகிய மதன் போன்றவும், சிந்தாமணி ஆகாயத்திலுள்ள மேகம்போலக் கொடைமாரி மொழிமாரி பொழிவோனும் ஆகிய,

இரட்டைநாக பந்தம்



உ
ச
த
ண்
ட
மு
வோ ண ணி
றி
ற் நா
கூ டை
பு வே கூ மீ டு மை க ல் வி கொ
ள் ழ் ண் வி மே
மா ம ண நா ரா தொ த் கூ வா
மே ணி ட த ர் ழி
வு க எ
க
த த் ம் ஜே ண ற
யு தி த் மு பு டி க் கு ம் போ ற்
ன் கீ ண் கு பி
ரு வு ச் ச நி லை எ உ மா ண் மொ த கீ ங்
கு ற் னி ச
நே டே சூ
ரீ
து கை
வா மொ
ழி ழி

2-வது இன்னிசை வெண்பா

சண்முக வித்தக நம்பிதனிச் சங்கீத
மொண்மாண்பு முத்தி யுதவுமே மாமன
நாராண்மை கல்விகொடை நாற்கவி மேலோர்க
ணேக்குண்டே ரீதுவா ழி.

அரும்பதவுரை

1 நெம்பர் வெண்பா

தண் - குளிர்ந்த. உச்சம் - உயர்வு. எழில் - அழகு. அணி - அழகிய. வேள் - மன்மதன். மணி - சிந்தாமணி. கம் - ஆகாயம். முகில் - மேகம்.

2 நெம்பர் வெண்பா

ஒள் - பிரகாசமான. மாண்பு - மாட்சிமை. மா - பெருமையான. நார் - அன்பு. ஈது இவைகளெல்லா வற்றுடன்.

2 நெம்பர் வெண்பாவுரை

ஆடவரிற் சிறந்த வித்தகனுமாகிய திரு. சண்முகத்தின் சங்கீதத்தின் ஒள்ளிய மாண்பானது, உலகினருக்கு வைதீக வழிகாட்டி முத்தியளிக்கும் அன்னவன் பெருமையான மனமும் அன்பும் ஆண்மையும் கல்வியும் கொடையும், நாற்கவி யுணர்ந்த மேலோர்களின் அருட் கண்ணேக்கத்தால், முன் சொன்னவைகளோடு திரு. சண்முகம் வாழ்க என வாழ்த்தியதாம்.

8. சதுரநாகபந்தம்—இன்னிசைவெண்பா

சண்முக மாலே தமிழறி தாதாவே
விண்புவி யோதுவான் மேகமே மேவிசை
மேனெறி யாலேநீ வாகு,கவிதாரே
மேவு புயாவாழ்க வே.

வாசிக்கும் முறை நாலு நாகத்திற்கும் தலைமுதல் வால் வரை மேலெயுள்ள வெண்பா சரியாகவரும். வாசித்தறிக.

அரும்பதவுரை

மால் - விஷ்ணு. விண் - தேவலோகம். வான் - ஆகாயம். மேவு இசை - பொருந்திய புகழ். மேல் நெறி - உயர்வாகிய நீதி. வாகு - அழகிய. கவிதார் - பாமாலை. மேவுபுயா - உள்ள தோளைப் பெற்றவனே.

சதுரநாகபந்தவுரை

தமிழறியும் தாதாவே வானவரும் மானிடரும் புகழக் கூடிய மேகம்போற் கொடுப்பவனே பொருந்திய சங்கீதத் தாலாகிய உயர்வான நீதியாலே, விஷ்ணுவைப் போன்ற கருணையுள்ள, திரு. சண்முகமே நீ அழகிய பாமாலையும் பூமாலையும் தோளின் கண் மேவப்பெற்று வாழ்க என வாழ்த்தியதாம்.

சதுரநாக பந்தம்



9. அஷ்டநாகபந்தம் - நிலைமண்டிலவாசிரியப்பா

தாதா டி. கே. சண்முகம் வாழி
நாவில் வாணிமா நாடக மாவிசை
தரமா வகமேவ வேதயை கேண்மை
வண்கவி மேவநீ மாண்போ டினிதே.

இச்செய்யுள் எட்டுநாகத்துக்கும் தலைமுதல் வால்வரை வாசித்தால் சரியாகவரும்.

அரும்பதவுரை

வாணி - சரஸ்வதி. மா–பெருமையான - மா – மிகுந்த இசை - சங்கீதம். தர - கொடுக்க. மா - இலக்குமி. அகம் - மனையில். மேவ – வாழ. கேண்மை - நட்பு. வண் - வளமையான. மேவ - பொருந்த. மாண்பு - மாட்சிமை.

அஷ்நாகபந்தவுரை

நாவில் சரஸ்வதி பெரிய நாடகமாகிய இசைக்கலையைத் தரவும் இலக்குமி நின் மனையிற் பொருந்தி வாழவும், தயவும் நட்பும் வளமையான கவிகளும் மாட்சிமையுடன் இனிதாக நின்னிடம் பொருந்தத் தாதாவான திரு. சண்முகம் நீ வாழ்க என்பதாம்.

அஷ்டநாக பந்தம்



நாலாரைச் சக்கர பந்தம்



10. நாலாரைச்சக்கரபந்தம் சந்தவிருத்தம்

தாதா நீயே தான்சண் முகமே மாரா நாவேதா
தாவே நாரா மால்நிக ரீகைக் கோவே பூநாதா
தாநா பூவே கோலநா டகமுகி லேவா பாநீதா
தாநீ பாவா லேபுக ழோதுவோர் தாயே நீதாதா

நாலாரைச்சக்கரபந்தவுரை

மாரா - மன்மதன் போன்றவனே. நாவேதா - நாவில் தமிழ்மறையுள்ளனே. தாவேநாரா - அன்பிற்கு இருப்பிட மாக உள்ளவனே. மால் நிகர் ஈகைக்கோவே - விஷ்ணு வைப் போலக் காக்கும் ஈகையுள்ள அரசன் போன்றவனே. பூநாதா - பூமியில் ஒரு தலைவனாக உள்ளவனே. தாநா - நல்ல தானத்திலிருப்பவனே. பூவே - யாவரும் இச்சை கொள்ளும் மலர் போன்றவனே. கோல நாடகமுகிலே - அழகிய நாடகத்திற்கு ஒரு மேகம் போன்றவனே. பா - பரவிய. நீதா - நீதியுள்ளவனே. வா - வரவேண்டும். பாவால் - பாடலால். புகழோதுவோர் - உன் புகழைப் பாடுவோருக்கு. தாயே நீ - மாதாவைப் போல நீ. நீதா - உண்மையுடையவனாதலால். தா - பரவிய (உலகில்) பெயர்பரவிய - தாதா கொடையாளி. நீயேதான் - நீ ஒருவனேயாதலால். தா - எனக்கும் நல்ல கொடையளிக்க வேண்டும் என்பதாம்.

11. ஆருரைச்சக்கரபந்தம் நிலைமண்டிலவாசிரியப்பா

1. மணிதரு பிறகணி கனகமிடு கையே
2. வாச வாழ்வே கரும்பு கொண்மத
3. னேமலி ஞாபக மிளிர்தா ளாண்மை
4. நாடு நம்பும் சுமுக மிவணின்
5. னிலவே மிகுபொன் னமுதிட லம்புவி
6. மகிழ்வோ டிசையே புகலக் கிளையும்
7. பெருக நாடகம் பேணிநீ மனைவி
8. புத்திர ரோடு புவிமிசை வாழ்கவே.

இச்செய்யுளை வாசிக்கும்முறை 1 நெம்பர் 2 நெம்பர் 3 நெம்பர்களிலிருந்து நேராக முறையே வாசித்து, 1 நெம்பரிலிருந்து சுற்றி வாசித்தால் செய்யுள் முடிவாகும்.

சக்கரத்தில் உட்புறத்திலுள்ள 1 2 3 4, இந்த வட்டங்களை முறையாகச் சுற்றிவாசித்தால் ஒருகுறள் வெண்பா வரும். வாசித்து மகிழ்க.

(குறள்வெண்பா)

தண்முக நம்பி தமிழ்நா டகமணி
சண்முக ஞானியே தான் — எனவரும்

ஆருரைச்சக்கரபந்தவுரை

மணி - சிந்தாமணியும். தரு - கற்பகமும். கனகம் இடுகை - திரவியம் கொடுக்கும் நினது கைக்கு. பிறகு - பின்னாலேதான் நிற்கும். வாச வாழ்வு - மணந் தங்கிய நல்வாழ்வுள்ளவனே. கரும்புகொள் மதனே - கரும்பு வில்லை யுடைய மன்மதனைப் போன்றவனே. மலி ஞாபகம்- மிகுந்த ஞாபகசக்தியும். மிளிர் தாளாண்மை - பிராசிக்கும் வள்ளன்மையும். நாடு நம்பும் - எல்லா நாடும் உண்மை யென்று நம்பிக்கை கொள்ளும். சுமுகம் - உனது சுத்தமான முகமானது. இவண் இன் நிலவே - இவ்வுலகிற்கொளிதரும்

இனிய சந்திரனைப் போன்றது. மிகுபொன் அமுது இடல் – உன்னிடம் வந்தவர்க்கு மிகுதியான திரவியமும் உணவும் கொடுத்தலாலே. அம்புவி - அழகிய உலகத்தார். மகிழ் வோடு இசையே புகல - சந்தோஷத்தோடு நின் புகழை யே பெரிதும் பேச. கிளையும் பெருக - நின் சுற்றம் பெருக. நாடகம் பேணி நீ - நீ நாடகக் கலையை மிகுதியாகப் போற்றி. மனைவி - நின் மனைவியும். புத்திரரோடு - மக்க ளுடனும் - புவிமிசை வாழ்கவே. உலகின்கண் நீடு வாழ்வா யாக.

குறள்வெண்பா

குளிர்ந்த முகமுள்ளவனும் ஆடவரிற் சிறந்தவனும் தமிழ் நாடகத்தில் இரத்தினம்போல் பிரகாசிப்பவனும் (யாரெனில்) ஞானமிக்க திரு. சண்முகமேதான் என்பதாம்.

ஆறுரைச்சக்கர பந்தம்



12. எட்டாரைச்சக்கரபந்தம் நேரிசையாசிரியப்பா

1. சீர்சால் வாணி வாய்கோ கனக
2. மாதுனக் கேர்முத லுதவிட நீமகான்
3. வேணவெக் கலைகளு மாக்குகா வகமுந்
4. தேசுள மேத்து சதிருங் காத்தே
5. கற்ப கால மகம்புதல் வருமே
6. திரண்டக் காரென் செகமீ தாண்டணி
7. பூபால ருடனே சீலந் தகைமை
8. யுடனே வாழியர் வளமே லோங்கவே
9. மேரு மலையின் மேல்விளக் கொப்பச்
10. சுபமா நின்சீர் வணமா
11. வாச முடனே வாழி மலிந்தே

இச் செய்யுள் வாசிக்குமுறை. 1. 2. 3. 4. நெம்பர்ப் படி. முறையே நேர்நேராக வாசித்து, 1. நெம்பரிலிருந்து சுற்றி வாசித்தால், செய்யுள் முடிவாகும். சக்கரத்தின் உட் பக்கமுள்ள. 1. 2. 3. 4. நெம்பர் வட்டத்தைச் சுற்றி வாசித்தால் ஒரு குறள் வெண்பாவரும். அவை—சாமத்தி லுந்தருவான் சண்முகம்பா வாணருக்கே காமணிகோக் காரெனக் காண்

எட்டாரைச்சக்கரபந்தக்கவி—உரை

சீர்சால்வாணி வாய் - கீர்த்தி மிகுந்த சரஸ்வதி வாயி லும். கோகனக மாது - தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமி. உனக்கு ஏர் முதல் உதவிட - உனக்கு அழகான செல்வத்தைக் கொடுக்க. நீ மகான் - நீ மகனுகவிருக்கின் ருய். வேண எக்கலைகளும் - வேண்டிய எல்லாக் கலைகளும். ஆக்கு கா அகமும் - உண்டாக்கிக் காக்கும் மனதுடன். தேசு உளம் ஏத்து - அழகிய மனமானது போற்றக்கூடிய. சதிரும் காத்து - சதிரென்னும் நாடக நடனக்கலையையும் காப்பாற்றி. கற்பகாலம் - பலஊழிக் காலமட்டும். அகம்

எட்டாரைச் சக்கர பந்தம்



புதல்வர் திரண்டு - மனையிலுள்ள நின் இளமையான மக்கள் பெருகி. கார் என் - மேகம்போலச் சுரந்து. செகமீது ஆண்டு - உலகின் கண் ஆட்சிபுரிந்து. சீலம் தகைமை யுடன் - ஒழுக்கம்பெருந் தன்மையோடு. அணிபூபால ருடனே - அழகிய அரசப்பிரபுக்களுடனே. வாழியர் - வாழ்வாராக. வளம் மேலோங்கவே - நின் செல்வம் மேலோங்க. நின் சீர் - உன் கீர்த்தியானது. மேருமலையின் மேல் விளக்கொப்ப - மேருமலைமேலிட்ட தீபமொத்து. சுபமா வணமா வாசமுடனே - சுபமும் அழகும் மணமும் பொருந்த. மலிந்துவாழி - பெருகி வாழ்வதாக என்பதாம்.

குறள்வெண்பாவின் உரை

சாமத்திலும்-நடுயாமத்திலும் – பஞ்சகாலத்திலும் கூட. சண்முகம் - நமது தலைவன். பாவாணருக்கு - கவிராய ருக்கு. கா - கற்பகம். மணி - சிந்தாமணி. கோ - பசு காமதேனு. கார் என மேகம் என்று கூறும்படி. தருவான் காண் - கொடுப்பான் காண். பாய.பாக.

கடக பந்தம்



13. கடகபந்தம் நேரிசைவெண்பா

1. காரேகா வேகாந்தி யாமணியாக் கைதருகை
2. பேரேபே சும்புவனி பீடுமிகப்—பாரார்சீர்
3. பெற்றடிகே சண்முகமே பெட்பார்பா மாலைநீ
4. பெற்றுமே வாழி பெரிது.

அரும்பதவுரை

1. கார் - மேகம் கா - கற்பகம் - காந்திமணி, பிரகாசிக்கும் சிந்தாமணி - ஆ - பசு. காமதேனு,

2. புவனி - உலகம். பீடு - அழகு. பார் ஆர்சீர். உலகு நிறைந்த புகழ்.

3. பெட்பு ஆர்பாமாலை - அழகு நிறைந்த செய்யுள் மாலை.

கடகபந்தக்கவி—பொழிப்புரை

மேகம் கற்பகம். காந்தியுள்ள சிந்தாமணி காமதேனுவைப்போலக் கையிற் கொடையுள்ளதால் உன் பேரை அழகாகப் பேசுகிறது உலகம். அப்படி உலகப் புகழ் பெற்ற திரு. டி. கே. சண்முக வள்ளலே அழகிய பாமாலையைப் பெற்றுப் பெரிதும் நீ வாழக்கடவது என்பதாம்.

14. சதுரங்கப்பந்தம் நேரிசையாசிரியப்பா

1. தாரணி தோளுள சண்முக நம்பி
2. நாடக மணியே வாணி நாவுற
3. நாரொடு முளரி நண்ணுமா வகமதில்
4. வாழக் கானஞ் சங்கீத மலிய
5. நீளணி நிதியே குபேரனு வேளுர
6. மாகமே கற்பு வாகார் மாதோடு
7. மக்க ளணிதமர் வாகை சூடிமே
8. லீகை கருணையே சேரத் தானீ
9. வாசவ னேய வாழி
10. மாலீ கைகா ரணிகா மணியே

இதில் நாலு மூலையும் வாசித்தால் குறட்பா வரும். அவை தாரணி தோளுள சண்முக மாலீகை காரணி காமணி யே.

சதுரங்கப்பந்தம் அரும்பதவுரை

1. தார் - மாலை. நம்பி - ஆடவரிற் சிறந்தவன். 2. நாஉற - நாவிற்பொருந்த. 3. நார் - அன்பு. முளரி- தாமரை. நண்ணும் - வசிக்கும். அகம் - வீடு. 5. அணி- அழகிய. வேள்உரம் - முருகன் நெஞ்சில். 6. வாகுஆர் - அழகு நிறைந்த. 7. தமர் - சுற்றம். 9. வாசவன் - இந்திரன். 10. மால் - விஷ்ணு. கார் - மேகம். அணி - அழகிய. கா - கற்பகம். மணி - சிந்தாமணி

பொழிப்புரை

நாடக ரத்தினமே உனது நாவில் கலைமகள் பொருந்தவும். அன்போடு தாமரையில் வசிக்கும் இலக்குமி வளமிக்க, மனையில் வாழவும், இசையும் சங்கீதமும் பெருக. நீண்ட செல்வம் குபேரனைப் போலாகப் பெருக. உனது நெஞ்சில் முருகப்பிரான் வசிக்க, கற்பிற் சிறந்தமனையாளோடு. மக்களும், சுற்றமும் வெற்றிமாலை சூடவும் மேலான ஈகையானது. விஷ்ணு. மேகம் கற்பகம் சிந்தாமணிபோல் மலிய. கருணை சேர. தேவேந்திரன் போல நீ பூமாலைசூடி ஆடவரிற் சிறந்தவனுக. திரு. சண்முகமே. வாழ்வாயாக.

சதுரங்க பந்தம்

மா	ழி	வா	ய	னே	வ	ச	9 வா	ணீ	1 தா
மே	8 வீ	கை	க	ரு	உண	யே	சே	ர	த்
டி	கூ	கை	வா	ர்	ம	த	ணி	ள	கு
ற்	பு	வா	கா	ர்	மா	தோ	டு	7 ம	க்
க	மே	கூ	6 மா	ர	ளு	வே	ஜ	ர	பே
ம	லி	ய	5 நீ	ள	ணீ	நி	தீ	யே	·கு
த	கீ	ங்	ச	ஓ்	ண	கா	க்ஷ	ழ	4 வா
ரீ	ந	ண்	ஞு	மா	வ	க	ம	தீ	வ்
ள	மு	டு	ரொ	3 நா	ற	வு	நா	ணீ	வா
கு	ந	ம்	பி	௨ நா	ட	கு	ம	ணீ	யே

15. சதுரங்கப்பந்தம் நிலைமண்டிலவாசிரியப்பா

1. முத்தமிழ்க் கலாவித்வ ரத்ன ரவியே
2. பாவலா நாடக வித்தே பார்புகழ்
3. காவிய மிலக்கணங் காதலாக் கற்ற
4. சீலனே புலவோர் கவிகளைத் தேனெனப்
5. பருகி முகக்கம் போருக மாமன
6. மலரநீ வாரி வாழ்கென வொண்பொருள்
7. கொடுத்தே சற்சபை குழுமியோர் மகிழ
8. வாகா ரணிதமிழ் வளர,வே சங்
9. கீதம் பாருள நாடெலாம் பரவனந்
10. தம்பணி செய்தே சத்திய நீதி
11. மேவ ராப்பகல் வேணகலை வளர்த்
12. தேகா வளமுறு காவிரி மணலி
13. னும்பல தினம்சண் முகம்நீ வாழ்கவே

மூலைக்கு மூலை

நான்குமூலைச் சதுரத்தை வாசித்தால்

முத்தமிழ்க் கலாவித்வ ரந்தினம்?
சண்முகம் நீவாழ்கவே—என வருதலறிக.

(15) வது சதுரங்கப்பந்தம் அரும்பதவுரை

1. ரவி - சூரியன். 5. முகக்கு அம்போருகம் - முகரும் தாமரைமலர். 6. ஒண் - பொருள் - பிரகாச மானநிதி. வாகார் - அழகுநிறைந்த. 12. கா வளம் உறு - சோலைவளம் பொருந்திய.

பொழிப்புரை

முத்தமிழ்க் கலாவித்வரத்தினம் என்னும் இரவியே. பாவலனே. நாடகத்திற்கு வித்தானவனே. பஞ்ச காவிய மும் பஞ்சவிலக்கணமும் ஆசையோடு கற்ற சீலனே. புல வோர் கவிகளைத் தேன்போலப் பருகி. யாவரும் முகரும்

சதுரங்கப் பந்தம்

1 மு	ழு	கா	வி	ரீ	ம	ண	வி	13 ஞு	ம்	ப	ல	தி
ள	த்	ச	தே	ய்	செ	ணி	ப	ம்	10 த	ங்	ன	வ
வ	தீ	த	ம்	பா	ரு	ள	நா	டெ	லா	ம்	ப	ர
கா	ய	9 கீ	மி	ழு	கு	பை	ச	ற்	ச	தே	த்	டு
12 தே	நீ	ங்	யோ	ழ்	கெ	ன	வொ	ண்	பொ	ரு	ள்	7 கொ
த்	தி	ச	ர்	வா	க்	க	மு	கி	ரு	5 ப	ப்	ன
ர்	11 மே	வே	ம	ரீ	கூ	க	வி	க	ஊ	த்	தே	னெ
ள	வ	ர	கி	வா	ம்	ர்	லா	த	கா	ங்	ண	க
வ	ரா	ள	ழ	நீ	போ	வோ	க்	வி	ய	மி	ல	க்
ஊ	ப்	வ	8 வா	ர	ரு	ல	க	3 கா	த்	வி	க	ட
க	ப	ழ்	கா	ல	க	பு	ற்	ழ்	தே	வ	லா	நா
ண	கு	மி	ர	6 ம	மா	னே	ற	கூ	பா	2 பா	ர	ன
வே	ல்	த	ணி	ன	ம	ல	4 சீ	பு	ர்	யே	வி	த்

தாமரை மலர் போன்ற நின்மலமானது மலர, ஒள்ளியதிர வியத்தைவாரி நீ வாழ்யாக என்று கொடுத்தும். நல்ல சபைகளிலுள்ளோர் மகிழ அழகு நிறைந்த வரிசை பெற்ற தமிழ்மொழி வளரவும். தமிழர் சங்கீதம் உலகெலாம் பரவவும் அனேக பணிகள் செய்து. சத்திய நீதி நிரம்ப. இரவு பகலாக வேண்டிய கலைகளெல்லாம் வளர்த்து. சோலை வளம் மிக்கவுள்ள காவேரியாற்றிலுள்ள மணலினும் அதிக நாள். திரு. சண்முகம் நீ வாழ்வாயாக.

இந்தச் சதுரங்கப்பந்தம்

வாசிப்பது கொஞ்சம் சிரமமாக விருக்கும். பாடலையும் நெம்பரையும் பார்த்து வாசித்து மகிழ்க.

16. திருவடிப்பந்தம் நிலமண்டிலவாசிரியப்பா

1. திருவடிச் சேவை தாபோ தந்தா
2. வேதாந்த மேதா மேதகுங் கொங்கு
3. நிலைகலை நிதிமலி மதிதா வழிகிளை
4. நீள வாருதி நீர்போற் பெருகிட
5. வேதா சபைசதா முதலித முரைமன
6. மரைமுக யோக முளவண வளமலி
7. சண்முக மீளி நீதிசீர் சீல
8. முலக மிகவே நாவே பேசு
8. பேர்தார் வாகை வாழ வழகா
10. குகாவேள் வேலா மேலா வணிவர
11. மார நிலைநிதி யாதி தாவே

அரும்பதவுரை : 2. கொங்கு - வாசனை. 3. கிளை - சுற்றம். 4. வாருதி - கடல். 6. மரை - தாமரை 7. மீளி- சிங்கம். 9. தார்வாகை - வெற்றி மாலை. 11. ஆர்-நிறைய.

திருவடிப்பந்தம் பொழிப்புரை

நின் திருவடித்தரிசனம் தா. ஞானபோதந்தர வேண்டும் வேதாந்தமும் தரவேண்டும். உயர்வான வாசனையுள்ள நிலைத்த கலைகளும் செல்வமும் மிகுந்த அறிவும் தா. சந்ததி யாரும் சுற்றமும் உயர்வாகிக் கடல் நீர் போற்பெருகும் வரந்தா. பெரிய சபைகளிற் சந்ததமும் தலைவனாகி மொழிபு கலும் மனமுள்ளவனும் தாமரை மலர் போன்ற முகமும். யோகமும் உள்ள செல்வம் மலிந்த. திரு. சண்முக மென்னும் சிங்கம் போன்றவனின். நீதியும் கீர்த்தியும் பெருந்தன்மை யும் அறிந்த உலகத்தார் நாவினால் மிகுதியாகப் பேசக் கூடிய அவனுடைய பேரும் அவன்பெற்ற வெற்றிமாலையும் நிலைபெற்று வாழ வேண்டி. அழகுள்ளவனே. குகனே, செவ்வேளே, வேலாயுதமுள்ளவனே, உயர்வான அழகிய நின்னருளாலாகிய முன்சொன்ன, நிலைத்த செல்வமுதலியன வாழ நீ வரந்தர வேண்டும் என்பதாம்.

(திருவடிப்பந்தம் திருக்கைப் பந்தம். வாசிக்குமுறை. நடுவிலுள்ள வட்டம். 1. முதலாக மேலேறி, விரல்களிற் சென்றபடியே கீழிறங்கி, இதேமாதிரி. விரல்களில் மேலும் கீழுமிறங்கிப் பின்பு வெளிவட்டத்திலும் மேலும் கீழுமிறங்கி வாசிக்கவும். செய்யுளைப் பார்த்துக்கொண்டே சித்திரத்தில் வாசிப்பது நலம்.

திருவடிப் பந்தம்



17. திருக்கைப்பந்தம் நேரிசையாசிரியப்பா

1. சண்முகம் திருவார் வாருதி மான
2. ஞாதி ஞான மாரி பாரி
3. காரி பாரிலே மாகை யீகை
4. மாலே போல வேதா வேலவா
5. நாடகச் சரப ரவியவிர் சீர்பேர்
6. பேசு தேசு கவிகள் வள்ள
7. லுள னிவ னிதிமதி மணமக
8. விகமி சைமிக வாகவளி வரமே.

நாடகத்தில் சரபப்பட்சி போலவும் நாடகவுலகிலுள்ள இருள் நீக்கும் ஞாயிறு போலவும். கீர்த்தியும் அவன் பெயரும் உலகினர் பேசவும், அழகிய புலவர்கள் வள்ளல் ஒருவன் இருக்கின்ருன். இவன்யாரெனில் திரு. சண்முகம் தான். இவன் செல்வமும் அறிவாற்றலும் மக்களும் இவ்வுல கத்தில் பெருகி வாழவும், மங்களம் நிறைந்த கடல் போன்ற இவன் சுற்றம் பெருக. ஞானமிக்கவனை இவன் மேகம் பாரி வள்ளல் காரிவள்ளல் இவர்களைப்போலவும், கருணையில் திருமாலைப் போலவும் கையீகை பெருகவும் வேலாயுதந் தாங்கிய முருகப் பிரானே நீ வரங் கொடுக்க வேண்டும் என்பதாம்.

திருக்கைப் பந்தம்



வு
வ
ம
ஊ
வி
சை
வா
ளி
மே
ப
ய
சீ
ர்
தே
வி
வ
ள
ணி
தி
ம
கு
மி
கு
வ
ர
ர
வி
ர்
பே
சு
க
ள்
ர்
தீ
கா
யீ
வா
ஞா
ரீ
கை
ரு
ண
பா
மா
தி
மா
ரீ
லே
தா
வே
ல
போ
வா
நா
ம்
க
மு
ண்
ச்
கு
சு

18. ஒருவெண்பா தேர்ப்பந்தம்

நேரிசைவெண்பா

நம்பும் தகவு நகுமுகம் நற்பண்பு
செம்பொருளைச் சந்ததமுந் தேடிடுவோன்—நம்பியருள்
வித்தழகார் மன்மதன் மின்,வேந்தன் தனதனைத்த
முத்தமி ழன்சண் முகம்

ஒரு வெண்பாவாலான தேர்ப்பந்தவுரை

உலகினர் நம்புகின்ற பெருந் தன்மையும், சிரிப்போடு மலர்ந்த முகமும் நல்ல குணமும். செவ்வையாகிய பொருளையே (கடவுளென்றும் கூறலாம்) எப்பொழுதும் தேடும் மனமும் உள்ளவன். ஆடவரிற் சிறந்தவன். அருளுக்கு வித்தாகவுள்ளவன். அழகு நிறைந்த பிரகாச மான மன்மதன் போன்றவன். அரசனைப் போல் நீதியும் குபேரனைப்போலத் தனமும் பெற்றவனுமான. திரு. டி. கே. சண்முகம் முத்தமிழுங் கற்றவன் - என்பதாம்.

தேர்ப் பந்தம்


மு 4
ஞை த் த
த ண த ண் த
ம த ண் மி ண் வே ங்
ன் ம ர் கா ழ த த் 3 வி ள்
ங் தே டி ரு வோ ண் ந ம் பி ய ரு
மு த த ங் ச ர் ஜா ரு பொ
ந ற் ப ண் பு உ செ ம்
ம் கு மு கு ந
த க வு
ம்
ரு
4

22. வேண்டற்பா தேர்ப்பந்தம்

நேரிசையாசிரியப்பா

1. காவே கோவே நீதான் காலம்
2. தானறிந் தீயத் தான்கண்ட கவிஞர்
3. தவமணி சங்கர தாச சுவாமிகள்
4. சீடனும் திருமிகு கண்ணுச் சாமிவேள்
5. திருத்தவச் சேய்சண் முகமென வோதவே
6. நாடக மியலிசை நற்றமிழ் மலியவே
7. நீதி யோங்கவே நீசெய் யறமெலாம்
8. செய்யசித் திரத்தே திகழும் செய்யு
9. ணூலைச் செய்தே நும்பால் வந்தேன்
10. மாண வென்மகள் மகிழ்பெருந்
11. திருமணம் செய்திடத் திரவியம் தாவே.

அரும்பதவுரை

1. கா - கற்பகம். கோ - பசு (காமதேனு) 8. செய்ய - செவ்வையாகிய.

தேர்ப் பந்தம்


தி
பெ ரு ங்
ழ் கி ம ள் க
தே ன் 10 மா ண வெ ன் ம
ங் வ ல் பா ம் நு தே ய் செ
தே தி கூ ழு ம் செ ய் யு 9 ஞா லை ர்
த் ர தி த் சி ய ய் 8 செ ம் லா மை ற ய
மி ழ் ம லி ய வே 7 நீ தி யோ ங் கூ வே நீ செ ய்
ற ற் ந சை வி ய மி கூ ட 6 நா வே த வோ ன மெ கூ மு
ச் சா மி வே ள் தி 5 ரு த் த வ ச் சே ய் ச ண்
ஞு ண் கூ கு மீ ரு தி ம் ஜ ட தீ 4 ள் க
ம ணி ச ங் கூ ர தா ச சு வா மி
வ த 3 ர் ஓ வி கூ ட ண் க
றி ங் தீ ய த் தா ன்
ன தா 2 ம் ல கா
நீ தா ன்
வே
கா
கோ

19. கூடசதுக்கம் சந்தவிருத்தம்

1. போதா வாணி தாசா வாசவா புண்ணிய முளயோக
2. வேதா நாரா பூமா நேமா வாமா நகைமுகத்தோ
3. னேதா மாமா ராமிகு நீதா காவா வானெழிலி
4. தாதா சண்முக நாமா வாகைத் தாரா நீவாழி

இச் செய்யுளில். 3. மூன்று அடிக்குள் நாலாவது அடியை மறைத்திருப்பதறிக.

கூடசதுக்க மென்பது

மூன்றடிக்குள். 4வது அடிமறைந்திருக்கப் பாடுவதாம்

எதிரில் உள்ள கட்டத்தில். 1. நெம்பரிலிருந்து வாசித்து நடுவே நேரே வாசிக்கவும்.

கூடசதுக்கத்தின் பொழிப்புரை

ஞானபோத முள்ளவனே. கலைமகளைப்பணிவோனே. தேவேந்திர போகமுள்ளவளே. புண்ணியமும் யோகமும் உள்ளவனே. வேதங்கற்றவனே. அன்புள்ளவனே. அரசன் போன்றவனே. நியமந்தவருதவனே. அழகுள்ள வனே. மகிழ்வான முகமுள்ளவனே. தாமமென்னும் முடி தரித்தவனே (அரச வேடத்தில்) மன்மதன் போன்றவனே மிகுந்த நீதியுள்ளவனே. கா. கற்பகம். ஆ - காமதேனு. வான் - ஆகாயத்திலுள்ள. எழிலி - மேகம் இவைகளைப் போலீயும், தாதாவானவனே. சண்முக மென்னும் பெய ருள்ளவனே, வெற்றி மாலை யணிந்தவனே, நீவாழ்வாயாக— என்பதாம்.

கூடசதுக்கம்



20. கோமூத்திரீகம் வஞ்சிவிருத்தம்

1. விண்மணி நாடக வித்தகனே
2. ஒண்முக மேதான் தண்மதியே
3. வண்பணி தேடக விரதமனே
4. சண்முகத் தாதா தருமணியே

இச் செய்யுளை நேரில் வாசித்தது போலவே, மாட்டு மூத்திரத்தாரை போல். நடுவேயுள்ள கோடுகளின்படி வாசித்தால் சரியாகவரும்.

கோமூத்திரீகா பந்தவுரை

ஆகாயத்தில் உலவும் இரவிபோன்று. நாடகத்திற்கு உழைப்பென்னும் ஒளி பரப்பிடும் வித்தாக உள்ளவன். (அறிவுள்ளவன்) ஒள்ளிய அவனுடைய முகமானது குளிர்ந்த சந்தரன் போன்றது. உலகில் வளமையான பெருந்தொண்டு எதுவென்று நாடாறும் தேடிச் செய்யும் மனத்தைப் பெற்றவன், யாரெனில் கற்பகம் சிந்தாமணியைப் போலக் கொடுக்கும் தாதா. திரு. சண்முகம்தான்—என்பதாம்

கோமூத்திரிகா பந்தம்



21, திருவெழுகூற்றிருக்கை

நிலைமண்டிலவாசிரியப்பா.

1. ஒருதனிப் பரனிணை ஒன்றிய இருதிரு
2. மலரடி ஒருகணம் மறவாமல் ஓர்ந்தே
3. இருவினை மும்மலம் ஏகிட இரண்டற
4. ஒன்ருய்க் கலந்து துதிப்போன் ஓருயிர்
5. ஈருடல் போல்மனை யாளுடன் மூன்று
6. காலமும் நாலுபுரு டார்த்தம் வழா அது
7. மூவருக் குதவியே இரண்டற மோங்கவே
8. ஒருமித்து மனையறம் ஓங்கிட ஒருபிழை
9. யில்லாமல் நடத்தியே இருநிலம் போற்றிட
10. முத்தமிழ் நாற்கவி ஐந்துகாப் பியமும்
11. நாற்றிசை புகழும் மூன்றிசை யுடனே
12. இருராக தாளம் ஒருமையாப் பயிலவே
13. ஒருகுரு சங்கர தாச சுவாமி
14. இருதிரு மலரடி முப்போதும் வணங்கி
15. நாலங்க நாடகம் ஐம்புலத் தாறு
16. மனத்தினி லமைத்தே அஞ்சாமல் மேடையில்
17. நாலுதிணை மக்கள் மும்முடி வேந்தன்
18. இவனென இருகரங் கொட்டி ஒருங்கே
19. வாழ்த்திட ஒருகொம்பு இருசெவி மும்மதம்
20. நால்வாய் ஐங்கரன் தம்பி அறுமுகன்
21. அருள்தர எழுமையும் பயனுற ஆறெழுத்
22. தோதியே ஐந்திலக் கணமும் நான்மறை
23. நீதியும் மூவர்தே வாரமும் ஈரடித்
24. திருக்குறள் ஒருகுரு வின்றியே ஓர்ப்பொடு
25. கற்றேன் இருநிலம் கைதொழும் மூவராம்
26. நான்முகன் ஐம்படை யுள்ளோன் ஆறெடு
27. கடுக்கை மாலையும் பிறையும் எழுந்து



ஒருதனிப் பரனீலை
ஒருகுணம் மறவாமல்
இருதிரு மலரடி
ஒன்றிய
ஓர்ந்தே
இருவினை
மும்மலம் ஏகிட
இரண்டற
ஒன்றாய்க் கலந்து துதிப்போன்
ஒருமித்து மனையறம் ஓங்கிட
இரண்டற மோங்கவே
மூவருக் குதவியே
நாலுபுரு டார்த்தம் வழாஅது
மூன்று காலமும்
ஈருடல் போல்மனை யாளுடன்
ஒருயிர்
ஒருபிழை யில்லாமல் நடத்தியே
இருநிலம் போற்றிட
முத்தமிழ்
நாற்கவி
ஐந்துகாப் பியமும்
நாற்றிசை புகழும்
மூன்றிசை யுடனே
இருராக தாளம்
ஒருமையாய் பயிலவே

28. சீறராச் செஞ்சடை புனேவோனே ஆரு
29. தாரத் திருத்தி ஐம்புல னடக்கியே
30. நாலந்தக் காரணம் முத்தொழில் நடாத்த
31. இருக்கும் ஆசனம் ஒன்றவே நிகழும்
32. ஒருநாள் விடாமற் செய்தே தருமம்
33. இருகண் ணிழந்தோர் முக்கால் முடவர்
34. நாற்றிசை யுள்ளோர் அஞ்சலஞ்ச லாகவே
35. அவ்வை யகம்வர அறுசுவை யுண்டி
36. அஞ்சே லெனவிடும் நல்லோன் நான்மறை
37. தேர்ந்த முப்புரி நூலணி இருபிறப்
38. பாளரும் ஒருகதி யில்லா அகதிகள்
39. ஒருங்குவந் தாலும் இருளாம் வறுமை
40. யேகமணி யுணவுடை மூன்றுந் தருவோன்
41. நாற்கவி வாணர் மிடிப்புலிக்கு அஞ்சியே
42. நாலுதலே வாசலில் வரக்கா மணியா
43. மூன்றும் தங்கிய முதன்மை யான
44. இருகை யாலே ஒருகுறை வின்றி
45. வாழ்கெனத் தருவோன் ஒருபெருங் கடலெனும்
46. இரும்பே ரவையில் கூடலில் உயர்ந்தோர்
47. முத்தமிழ்க் கலாவித்வ ரத்தினம் எனும்பேர்
48. நானிலம் போற்றிடப் பெற்றசீர் நம்பி
49. முக்குண மதிலே இருகுணம் நீக்கியே
50. ஒருசத்வ குணமனம் ஒன்றிட இருத்தியே
51. முச்சகோ தரரிவன் பரதன் போலவே
52. இரும்புவி புகழ ஒருசக நடிகரை
53. ஓம்புதல் செய்தே ஒருமன தாக
54. இருநிதி படைத்தே எழுமூன்று வள்ளலில்
55. ஒருவன் பாரிபோல் உவந்துபல் லூழி
56. ஒன்றுசீர்ச் சண்முகம் ஓங்கிநீ வாழ்கவே

[திருவெழுக் கூற்றிருக்கைத் தேரில், 1, 2, 3, 4, 5, 6, 7 இந்த நெம்பர் வருமிடங்களில் எழுத்தாலும் அப்படியே வருவதைத் தேரில் வாசித்து மகிழ்க.]

அரும்பதவுரை

1 ஒருதனி - ஒப்பில்லாமல் தனித்த. ஒன்றிய - பொருந்திய. 1 ஓர்ந்து - அறிந்து. 3 இருவினை நல்வினை தீவினை - மும்மலம். ஆணவம் - காமியம் மாயை. 6 வாழா அது - வழுவாமல். 7 மூவர் - துறந்தவர். வறுமையாளர் - இறந்தவர். இரண்டறம்-இல்லறம் துறவறம். 11 மூன்றிசை-மத்திமம் பஞ்சமம் நிசாதம். 15 நாலங்கம் - வேடம். நடிப்பு - பாடல் வசனம். ஆறு - வழியாக. 17 திணை - நிலம். 10 நால்வாய் - தொங்குகின்ற வாய். 15 ஓர்ப்பொடு - ஆவலொடு. 16 ஐம்படை - சங்கு, சக்கரம், வாள், கோதண்டம், தண்டு. 17 ஆறு - கங்கை. 18 சீறுஅரா - சீறுகின்ற நாகம். 19 ஆறு ஆதாரம் - மூலாதாரம். மணிபூரகம் - சுவாதிட்டானம். அனுகதம், விசுத்தி - ஆக்ஞை. ஐம்புலன் - கண், காது, வாய், செவி, சரீரம். 30 நாலு அந்தக்கரணம் - மனம் புத்தி சித்தம் அகங்காரம். முத்தொழில் - ரேசக பூரக கும்பகம். 31 ஒன்றவே - பொருந்தவே. 33 முக்கால் - இரண்டு. காலோடு-கைத்தடியுடன் மூன்றுகால். 34 அஞ்சலஞ்சலாக - வரிசை வரிசையாக. 41 மிடிப்புலி - வறுமைப் புலி. 41 கா. மணி. ஆ - கற்பகம் சிந்தாமணி காமதேனு. 46 கூடல் - மதுரை. 48 நம்பி - ஆடவரில் சிறந்தவன். 50 ஒன்றிட - பொருந்திட. 51 முச்சகோதரர் - 1 சங்கரன் இராமர், 1 முத்துச்சாமி இலக்குவன். 4 பகவதி - சத்துருக்கனன். 3 வதுபரனுதலால் - சண்முகத்தைப் பரதனென உவமித்ததாம். 56 ஒன்று சீர் - கீர்த்திபொருந்திய.

23. வினுவுத்தரம் பஃருேடைவெண்பா

மாலின் மனைவியார் மால்பஞ் சணையெவை
நக்கன் எரித்ததெது நாட்டம் உளதெவை
தேவசே ஞபதியார் சீர்முனிவர் செய்வதெவன்
ஆண்சேயைச் சொல்வதெது ஆறுவத னப்பேரென்
சங்கம் வளர்த்ததெது தன்மானங் காப்பதெது
மூத்த புலமையென் முத்தின் பெயரென்
தமிழர் தலைநகரில் தண்டமிழ்மூ தாட்டி
மனையில் வசிக்கின்ற வள்ளலைச் செய்யுட்
பொருளறிந்தே சென்ருல்நீ பொன்பெறுவாய் பாணு
விரைவிலே நீங்கும் மிடி.

விஞவுத்தரமென்பது—கேள்வி—பதில்

பரிசு பெற்று வரும் பாணனை பரிசு பெருத பாணன், நீ யாரிடத்தில் பரிசுபெற்ருயென வினவ, அதற்கு பதிலாகக் கவிபாடி கவியின் பொருளறிந்து செல் நீ பொன் பெறுவாய் என்று பரிசுபெற்ற பாணன் பாடினது போற்பாடும் பாட்டாகும்.

விஞவுத்தரத்தின் உரை

மாலின்மனைவி - திரு. மால்பஞ்சணை - அனந்தன்' நக்கன் எரித்தது - புரம். நாட்டம் உள்ளது - கண்ணு. தேவசேனுபதி - சாமி. சீர்முனிவர் செய்வது – தவம். ஆண்சேயைச் சொல்வது - மகன். ஆறுவதனப்பேர் - சண்முகம். சங்கம் வளர்த்தது - முத்தமிழ். தன்மானங் காப்பது - கலை (ஆடை) மூத்தபுலமை – வித்வம். முத்தின் பெயர் - ரத்தினம். தமிழர் தலைநகர் - சென்னபட்டினம். தண்டமிழ் மூதாட்டி - அவ்வை. மனை - அகம்.

திருவனந்தபுரம், கண்ணுச்சாமி தவமகன் சண்முகம். முத்தமிழ்க் கலாவித்வரத்தினம், அவரைக் காணவேண்டுமாஞல், சென்னப்பட்டினம் அவ்வையகத்திற்குச் செல். உனது வறுமையானது நொடியில் தீர்ந்துவிடும். பாணு. செல்வாயாக—என்பதாம்.

24. பிறிதுபடுபாட்டு நேரிசையாசிரியப்பா

சங்கர தாச சுவாமிதன் மாணவர்
தன்னி லுயர்சங் கரவேள் முத்துச்
சாமி பகவதி தன்பிறந் தோரிங்
கிவர்தன் னுடன்நா டகமோம்பி இசைவளர்ப்
போன்சங் கத்த மிழ்க்கலா
வித்துவ ரத்தி னம்சண்முகமே.

மேலேயுள்ள நேரிசை யாசிரியப்பா. கட்டளைக் கலித்துறையாவதறிக.

சங்கர தாச சுவாமிதன் மாணவர் தன்னிலுயர்
சங்கர வேள்முத்துச் சாமி பகவதி தன்பிறந்தோ
ரிங்கிவர் தன்னுடன் நாடக மோம்பி இசைவளர்ப்போன்
சங்கத் தமிழ்க்கலா வித்துவ ரத்தினம் சண்முகமே

25. நடுவெழுத்தலங்காரம் கட்டளைக்கலித்துறை

பாலுமை மால்பொறி கீழ்துவர் பார்நிறை பாக்கலையே
காலகா லன்றலை சங்குபூக் கோபம்பாக் காயுடனே
மேலவர் பெண்ணீர் அகலங் குடைமணி வேள்மனையே
சூலிநட் புத்தார் அரும்பு திவிபொன்னி சொற்கிளியே.

(குறள்வெண்பா)

சொற்குரை மூன்றெழுத்தாம் தூய நடுவெழுத்து
நற்பாட் டுடைத்தலைவ னும்.

எப்படியென்றால்,

மேலேயுள்ள, கட்டளைக் கலித்துரையில் உள்ள சொற்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்றெழுத்தாகவே, பொருள் வருவித்து உரையில் நின்ற நடு எழுத்தெல்லாம் ஒரு செய்யுளாக வருவதாம்.

அதன்படி வரைந்து காட்டியதறிக.

நடுநின்ற எழுத்தெல்லாம் மேலிருந்து வாசித்தால்

முத்தமிழ்க்க லாவித்வ ரத்தின முன்புயர்
வித்தகன் சண்முக வேள்

என்ற குறள் வெண்பா வருவதறிக,

பால் - அமுது. உமை - சத்தி. மால் - புதன் பொறி - பூமின். கீழ் - தாழ்வு. துவர் - பாக்கு. பார் - சகம். நிறை - துலாம். பா - கவிதை. கலை - வித்தை. காலகாலன் - சிவன். தலை - சிரம். சங்கு - நத்து. பூ - மேதினி. கோபம் - சினம். பாக்கு - கமுகு. ஆய் - அன்னை. மேலவர்பெண் - விபுதி. நீர் - பயம். அகலம் - மார்பு. குடை - கவிகை. மணி - முத்து. வேள் - மதன் மனை - அகம். சூலி - கன்னி. நட்பு - நேசம். தார் - கண்ணி. அரும்பு - பூமுகை. திவி - பகல். பொன்னி - காவேரி. கிளி - கிள்ளை.

26. கரந்துறைச்செய்யுள்

(நிலைமண்டிலவாசிரியப்பா)

ஓது மாசா னுற்ற னல்லணி
சீருய ராதிசித் தசனும் ராக
வமுதுண் டேசகம் வான மதியொத்
தரசிவ னித்ய விறலா னுக
வாக்கேழ் பூமி மாதவத் தமுதே.

மேலேயுள்ள செய்யுளில் - ஈற்றயலெழுத்தாகிய - மு - முதலாக ஒரு எழுத்துவிட்டு ஒரு எழுத்தாக மேலே வாசித்தால் ஒருகுறள் வெண்பா வருவது காண்க.

கரந்துறைச் செய்யுள் பதவுரை

ஓதும் - கற்பிக்கும் (நாடகக் கலையை). ஆசான் - குருவானவன். உற்ற - பொருந்திய நல் அணி - நல்ல அழகானது. சீருயர் - கீர்த்தி உயரப் பெற்ற. ஆதி சித்தசனும் முதல் மன்மதனும் (சிவபிரான் நெற்றிவிழியெரிபாயு முன் உள்ளமன்மதன்) ராகம் - இராகமாகிய. அமுதுண்டே - அமிர்தத்தையுண்டு. சகம் - உலகத்தார். வானமதியொத்த - ஆகாயத்திலுள்ள பூரணச்சந்திரனை யொத்த. அரசு இவன் - அரசனைப் போன்ற தலைவன். ஏழ்பூமி - ஏழு உலகங்களுக்கும். மாதவத்தமுது - பெரிய தவஞ்செய்து பெற்ற அமுதம் போன்றது. வாக்கு - தலைவனுடைய மொழியானது. விறலானுக - வலிமையுள்ளவனுகுக (எனக் கூறப்பெற்றவன். யாரெனின். சத்திய சீலன் சாதுத்தன்மை பெற்றவனுகிய - முத்தமிழ்க் காலவித்வரத்தினம் சண்முகம் என்பதாம.

(குறள்வெண்பா)

முத்தமிழ்க்க லாவித்வ ரத்தினம் சண்முகம்
சத்திய சீலனற் சாது.

27. காதைகரப்பு (நேரிசைவெண்பா)

1 2 3 4 6 5 13 14 22 24 10 11 12
அறத்தாற் றவத்தா ன் ம ற் ருய் ந் த க லை யி ன் ப த்
21 7 8 9 20 22 17 16
தி ற த் தா லுருவத்தே தேசு—சி ற ப் பு ற லா ல்
19 25 26 15 18 27
ந ம் பு ம் வி ழு மி ய ந ற் றெ ய் வ ம் வேலனருள்
முன்புபெற் ரேன்சண் முகம்.

இச் செய்யுளில் – ஒரு குறள்வெண்பா விருக்கிறது. நெம்பர்ப் படிக்காண்கவும்.

1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 16 17 18
அ ற த் தா ன் வ ரு வ தே யி ன் ப ம ற் றெ ல் லா ம்
19 20 21 22 23 24 25 26 27
பு ற த் த பு க ழு மி ல

மேலுள்ள வெண்பாவின் மூன்றடிக்குள் - இரண்டடிக் குறள் வெண்பாவை - மறைத்திருப்பதறிக.

காதைகரப்பு அரும்பதவுரை

தேசு - அழகு. விழுமிய - பரிசுத்தமான. முன்பு - முற்பிறவியில்

பொழிப்புரை

அறத்தாலும் தவத்தாலும் ஆராய்ந்த கலையின்பத்திறத் தாலும் உருவம் மன்மதனைப் போல் பிரகாசிப்பதாலும். உலகினர் நம்பித்தொழும் நல்ல தெய்வமாகிய முருகப் பெருமானின் திருவருளை முன்சென்மத்திலேயே சண்முகம் பெற்றவனென்று தெரிகிறது. என்பதாம்.

28. மாத்திரைச் சுருக்கம்

அளவடிவிருத்தம்

அளபொன்று நீக்கிய குவளைக்கு வேந்தனும்
அளபொன்று நீக்கிய வாய்மைக்கு பேரனும்
அளபொன்று நீக்கிய உயிரைவ ணங்குவோன்
வளவ,னவ்வைநா டகமணி சண்முகம்

இதன் உரை

குவளை - காவி. இதில் ஒரு மாத்திரை நீக்க. கவி - கவிக்கு அரசன். வாய்மை - நீதி - இதில் ஒரு மாத்திரை- நீக்க. நிதி - நிதியிற்குபேரன். உயிர். சீவன் - இதில் ஒரு மாத்திரை நீக்க. சிவன் - சிவனை வணங்குவோன். வளவன் - சோழன். ஔவை நாடகத்தில் இரத்தினம் போன்ற திரு. சண்முகம். என்பதாம்

மாத்திரைச் சுருக்கமாவது - ஒரு மொழிக்கு. ஒரு உரை கூறி உரை முதலெழுத்தில் ஒரு மாத்திரை நீக்கிப் பொருள் கொள்வதாம்.

29. மாத்திரை வருத்தனம் அளவடி விருத்தம்

அளபொன் றேறிய செல்வத்தைச் சொல்பவன்
அளபொன் றேறிய விதந்தனைச் சூடுவோன்
அளபொன் றேறிய புரவிபோ லீபவன்
வளமொன்று முத்தமிழ் மாமணி சண்முகம்

மாத்திரை வருத்தன மென்பது. செய்யுளில் வரும் ஒரு மொழிக்கு உரைகூறி. உரைமுதலெழுத்தில் ஒரு மாத்திரை வருவித்துப் பொருள் கூறுவதாம்.

செய்யுளின் உரை

செல்வம் - நிதி - இதில் ஒரு மாத்திரை கூட்ட. நீதி - நீதியைச் சொல்பவன். விதம் - வகை. இதில் ஒரு மாத்திரை கூட்ட. வாகை வாகைமாலை சூடுவோன். புரவி – பரி. இதில் ஒரு மாத்திரை கூட்ட, பாரி – பாரிபோலீபவன் வளம்பொருந்திய முத்தமிழ்மணி. திரு. சண்முகம் என்பதாம்.

30. திரிபங்கி கட்டளைக்கலித்துறை

சங்கத் தமிழன் திசைபுகழ் சீராளன் தண்ணளிசேர்
மங்குற் கொடையான் வசைமொழி கூருதான்
வண்ணமதன்
பொங்குந் தனவான் அசைவிலா மாவீரன்
புண்ணியவான்
தங்கக் குணவான் இசைபொழி பூமாரி சண்முகமே

மேலே உள்ள கலித்துறை. மூன்று செய்யுளாக, வருவதறிக.

வஞ்சிவிருத்தம்

1	2	3
சங்கத் தமிழன்	திசைபுகழ் சீராளன்	தண்ணளிசேர்
மங்குற் கொடையான்	வசைமொழி கூருதான்	வண்ணமதன்
பொங்குந் தனவான்	அசைவிலா மாவீரன்	புண்ணியவான்
தங்கக் குணவான்	இசைமொழி பூமாரி	சண்முகமே

திரிபங்கி அரும்பதவுரை

1. தண்ணளி - குளிர்ந்த கருணை. 2. மங்குல் - மேகம். வண்ணம் - அழகு. 3. மா - பெரிய. 4. இசை-பண் – சங்கீதம். பூ - அழகிய

திரிபங்கியின் பொழிப்புரை

சங்க முத்தமிழுங் கற்றவன், நாற்றிசையும் புகழும் கீர்த்தியுள்ளவன் குளிர்ந்த கிருபை சேர்ந்த மேகம்போலக் கொடுப்பவன். ஒருவரையும் கெட்டமொழி பேசி வருந்தச் செய்யாதவன் அழகில் மன்மதன் போன்றவன். வளருகின்ற செல்வமுள்ளவன் சொற்போரில் அயர்வில்லாத பெரிய வீரன், மிகுந்த புண்ணியங்களைச் செய்பவன், தங்கம் போன்ற குணமுள்ளவன் சண்முகம் என்பதாம்.

31. பஞ்சபங்கி, நிலைமண்டிலவாசிரியப்பா

ஒரு செய்யுள் ஐந்து செய்யுளாவது

முத்தமிழ் தேர்ந்த முதல்வன் கலைமணி
வித்தகன் சண்முக வேள்குணக் குன்றெனப்
பெயர்பெற்ருேன் பகவதி கூடவிசை மணக்கும்
பலப்பல நாடகம் பேணிமகி தலத்தோர்
இணக்கமுடனே யொருமித்து வாழவெடுத் துரைத்தே
கணக்கி லடங்காப் பணிபுரி வோனெனும்
காசினி யேதான் சபைதனி லேவான்
றிரிமே கம்தேன் மழைபொழிந் தாப்போன்
மொழிபுகல்வோன், சொல்லின் படியே நடப்போன்
சுருதிமுறை யல்லும் பகலும் அறிந்திடு
வான்வல்ல புலவோர் கவிகளைப் பொன்னெனப்
போற்றியுல கறியச் செய்வா னுவந்து
மற்றுங்கேள் தன்னுயிர் போல மன்னுயிர்
காக்கும் மனதோடு சுற்றந் தழுவல்
செய்தொழிலிற் சோர்வில் லாமற்றன் னுடனே
ஒற்றுமை யானசக நடிகர்க் குதவி
செய்தல்நடம் பயிற்றல் முற்று மெடுத்தே
என்னுவால் மொழியப்போ மோபுல வீரே.

மேலேயுள்ள ஆசிரியப்பாவில் குறள் வெண்பா, கட்டளைக் கலித்துறை, வஞ்சிவிருத்தம், நேரிசை வெண்பா, அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம் ஆக 5 செய்யுள் அடங்கியிருப்பதைக் கீழே காண்க.

1. குறள்வெண்பா

முத்தமிழ் தேர்ந்த முதல்வன் கலைமணி
வித்தகன் சண்முக வேள்.

2. கட்டளைக்கலித்துரை

குணக்குன் றெனப்பெயர் பெற்றேன் பகவதி கூடவிசை
மணக்கும் பலப்பல நாடகம் பேணி மகிதலத்தோர்
இணக்க முடனே ஒருமித்து வாழ வெடுத்துரைத்தே
கணக்கி லடங்காப் பணிபுரி வோனெனும் காசினியே.

3. வஞ்சிவிருத்தம்

தான்சபை தனிலே
வான்றிரி மேகம்
தேன்மழை பொழிந்தாப்
போன்மொழி புகல்வோன்.

4. நேரிசைவெண்பா

சொல்லின் படியே நடப்போன் சுருதிமுறை
யல்லும் பகலும் அறிந்திடுவான்—வல்ல
புலவோர் கவிகளைப் பொன்னெனப் போற்றி
யுலகறியச் செய்வா னுவந்து.

5. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

மற்றுங் கேள்தன் னுயிர்போல மன்னுயிர் காக்கும்
மனதோடு
சுற்றந் தழுவல் செய்தொழிலிற் சோர்வில் லாமற்
றன்னுடனே
ஒற்றுமை யான சகநடிகர்க் குதவி செய்தல் நடம்பயிற்றல்
முற்று மெடுத்தே என்னுவால் மொழியப் போமோ
புலவீரே

2. மும்மண்டலவெண்பா

1. சத்தியவான் சற்குணத்தான் சாது நகைமுகன்
புத்திமலி விற்பன்னன் பூதலஞ்சொல்—வித்தகனும்
மற்புயத்தான் மாதனதன் முத்தமிழ்தேர் சண்முகம்
நற்கொடை யீத னளன்

2. சற்குணத்தான் சாது நகைமுகன் புத்திமலி
விற்பன்னன் பூதலஞ்சொல் வித்தகனும்—
மற்புயத்தான்
மாதனதன் முத்தமிழ்தேர் சண்முகம் நற்கொடை
யீதனளன் சத்திய வான்

3. சாது நகைமுகன் புத்திமலி விற்பன்னன்
பூதலஞ்சொல் வித்தகனும் மற்புயத்தான்—
மாதனதன்
முத்தமிழ்தேர் சண்முகம் நற்கொடை யீதனளன்
சத்தியவான் சற்குணத் தான்

மும்மண்டலவெண்பா வென்பது

ஒரு வெண்பாவே. மூன்று வெண்பாவாக வரும்படி அமைப்பது. அரும்பதவுரை - நகைமுகன் - எப்போதும் சிரிப்புடைய முகமுள்ளவன்—மா. தனதன்-பெரிய குபேரனைப் போன்றவன். ஈதல் நளன். முதல் வள்ளலில் ஒருவனாகிய நளமகாராசனைப் போல் கொடைதருபவன். சண்முகம் என்பதாம்

33. ஒற்றுப்பெயர்த்தல் - நேரிசை வெண்பா.

தீதிலா முத்தமிழ்தேர் சண்முகத்தின் தேர்பரத்தை
வீதிவழி செல்வதுகாண் மெய்த்தோழி—ஓதக்கேள்
மாமருதார் வாகைபுனை வேலான் மகிழ்வொடுவேய்
பூமனைவந் தாற்றாளைப் போடு.

ஒற்றுப் பெயர்த்தலென்பது. ஒரு செய்யுளுக்கு உரை கூறி ஒரு அடிக்கு வேறு உரை கூறுவது.

தண்டியலங்காரத்தில் உள்ள ஒரு செய்யுளைப் பார்த்து இச் செய்யுளமைக்கப் பெற்றது.

ஒரு அடியிற் பத்துமரம் வரும்படியும், தேர், மருது, என்ற சொல்வரும்படியும் மனைவியின் ஊடலைக் காட்டியும், வெண்பாவாகப் பாடினால்தான், கவியாம்.

அதன்படியே பாடி முடித்த, வெண்பாவுரை.

குற்றமில்லாத முத்தமிழையும் தேர்ந்த, திரு. சண்முகத்தின் தேரானது. பரத்தையர் வீதியில் செல்வதைப் பார்தோழி. என்று தோழிக்குத் தலைவி காட்டி, ஊடலோடு. தோழீ கேட்பாயாக - மா – பெருமை யான. மரு – வாசனை பொருந்திய. தார் வாகை புனை - வெற்றிமாலையைத் தரித்த. வேலான் - வேலாயுதம் தாங்கிய நம் தலைவன். மகிழ்வொடு - சந்தோஷத்துடன். வேய் - வேயப் பெற்ற (அலங்கரிக்கப் பெற்ற) பூமனை - அழகிய நமது அரண்மனைக்கு வந்தால் (விடாமல்) தாளைப்போடு - தாழ்ப்பாழைப் போடு- என்பதாம்.

இனி, ஓரடியிற் – 10. மரம் வரவேண்டும். 3. வது அடி 1. மா - மாமரம் - 2. மருது. மருதமரம்—3. ஆர் - ஆத்தி மரம்—4. வாகை - வாகை மரம் 5. புனை – புன்னைமரம் (புனை - இடைக்குறை) 6. வேல் - வேலமரம்—7: ஆல்- ஆல மரம் 8. மகிழ் - மகிழ மரம்—9. ஒடு - ஒடுமரம் (கடுக்காய் மரம்) 10. வேய் - மூங்கில்மரம்.

இதில், 10 மரமும் வந்ததறிக.

34. சிலேடை வெண்பா

தலைவனுடைய அரண்மனைக்கும் கைக்கும் சிலேடை

(நேரிசைவெண்பா)

மஞ்சுபயத் தோடொதுங்க வான்றருவுங் கீழ்ப்படிய
அஞ்சிமணி யாவந் தடையுமே—மிஞ்சுநிழற்
செவ்வைக் கொடைக்கீழே செல்வோர் களைப்பாற்றும்
அவ்வை யகமாளி கை

அரண்மனைக்கு × மேகமானது நிறைந்த தண்ணீரோடு மாளிகையின் கண்ணே ஒதுங்கி நிற்கும். ஆகாயத்திலுள்ள கற்பகமும் - மாளிகை. உயரமானதால் தாழ்ந்து நிற்கும். பயந்து புக்கிடமில்லாமல்- காமதேனுவும் சிந்தாமணியும் அம்மாளிகையில் வந்தடையும். மாளிகை கொடுக்கும் கொடையாகிய நிழலில் வந்தோர்கள் களைப்பாறச் செய்யும்- அம்மாளிகையாதெனில் - அவ்வையகம் என்னும் மாளிகை.

கைக்கு × மஞ்சு - மேகம் - பயத்தோடு - ஒதுங்கி நிற்கும். வான் - ஆகாயத்திலுள்ள கற்பகத்தருவும், கீழ்ப்படியும் - பயத்தோடு சிந்தாமணியும். ஆ பசு - காமதேனுவும். கையில்வந்தடையும் - அந்தச் செவ்வையான கைக் கொடைக்குள் தோல்விடைந்து அதுவல்லாமல் மிஞ்சிய கொடைநிழலிற் றங்கியவர்களுடைய.பசிதாக முதலியகளைப் பாற்றும் அத்தகையது. யார்கையென்றல் அவ்வையகத்தை ஆளி - ஆள்பவனுகிய திருசண்முகத்தின் திருக்கை என்பதாம்.

35. அக்கரச்சுதகம் நேரிசைவெண்பா

தனக்கென வாழா ததற்குவமை யோர்பூ
மனக்கவலே கொண்டாரை மாற்றும்—பனிமொழி
தார்சேர்தோட் சண்முகம் தானம் கொடுப்பது
கார்கேத கைதகை கை.

அக்கரச்சுதகம் என்பது - அக்கரம் எழுத்து. சுதகம் - குறைத்தல் அதாவது ஒரு மொழியில் ஒவ்வொரு எழுத்தைக் குறைத்துப் பொருள் கொள்வதாம்.

உதாரணம் - தனக்கென வாழாத. திரு. சண்முகத்துக்கு உவமானம். ஒருபூ - அவை. தாழம்பூ - தாழம்பூ அணிந்தவருக்கு மணந்தராமல் பிறருக்கே மணந்தரும்-தாழம்பூவின் பெயர் - கேதகை. கேதகை என்பதில். கே. என்பதைக் குறைத்தால் - தகை அன்பு. மனக்கவலேயோடு தன்னை யடுத்தவரை அன்பு மொழி கூறுதல். தலேவனியல்பு-தகை. என்பதில். த - என்பதைக் குறைத்தால் கை - தானம் கொடுப்பது கை. திரு. சண்முகம் தாழம்பூவைப்போல். தன்னையணிவோருக்கு மணமீயாமல் பிறருக் கீவதுபோல். தன் சுகம் கருதாமல் பிறர் சுகம் கருதுவது. தன்னைக் கவலேயொடு வந்தடைந்தாரை அன்பு மொழியாலுபசரித்து தானமாகக் கொடுத்துத் காப்பது மேகம்போன்றது கை.

கேதகை -தகை. கை மூன்றுக்கும் கூறிய பொருளறிந்து மகிழ்க.

36. அக்கரவருத்தனை நேரிசைவெண்பா

என்றலைவன் பாவாணர்க் கீவது சொற்போரிற்
சென்றபின் சூடுவது செல்லுங்கால்—ஒன்றுவது
மன்னனேர் சண்முக வள்ளல் பெரும்புலவர்க்
கன்பவா கைவாகை கை.

ஒன்றுவது - பொருந்துவது. பாவாகை - சூருவளிக் காற்று,

அக்கரை வருத்தனை என்பது. அக்கரம் - எழுத்து வருவித்தல் இதில் பவாகை என்று ஒரு மொழி எடுத்தாளப்பெற்றது. இதைக்கொண்டே தலைவனுக்கு மூன்று உவமை கூறப்பெற்றது அதாவது.

1. தலைவன் புலவருக்கீவது. கை—இதில்-வா. என்பதை வருவிக்க - வாகை

2. சொற்போரிற் சென்று சூடுவது வாகை. இதில் ப - என்பதை வருவிக்க பவாகை

3. சொற் போரில் செல்லும்போது சூருவளிபோற் செல்வானென்பது கருத்து.

1. கை – கரம்

2. வாகை - வெற்றிமாலை

3. பவாகை - சூருவளிக்காற்று.

37. அஃறிணைப்பலபால் விடுதூது

மடக்குக்கீர்த்தனை - இராகம் மோகனம்;- தாளம் ரூபகம்.

(பல்லவி)

கண்டால் வரச்சொல்லுங்கள் - நீங்கள்
கண்டால் வரச்சொல்லுங்கள்
திருக்-கண்ணுச்சாமிபெற்ற சண்முகவள்ளலைக்
கண்டால் வரச்சொல்லுங்கள்

(அனுபல்லவி)

மண்டலமேபுகழ் நாடகமன்னன்
மதுரத்தமிழிசை ஓம்பிடுந்தென்னன்
முண்டகக்கையாற் கொடைதரும் கன்னன்
முயற்சியில்மாருத ஞானவிற்பன்னன்
முத்தமிழ்க் கலாவித்வ ரத்தினத்தை இத்தினத்தில்
கண்டால் வரச்சொல்லுங்கள்

(சரணங்கள்)

இலகுங்குள மதிலெங்கணு முறுமத்தவளைகளே
இசைவேந்தனை நினைந்தேகழன் றதுவத்தவளைகளே
இரைதேடியே பெடையோடுறை எழிலார்பாலனமே
இக்குச்சிலைக் கணையால்மெலிந் திரங்கலைபாலனமே
இணைசேர்ந்தவராலே இசைசேர்ந்தவராலே
இடைமீதுள உடைசோருது தடையேயிலாக்
கொடையாளனைக்—கண்டால் வரச்சொல்லுங்கள் 1

இளங்காவினி லிசைபாடியே இருக்குங் கோகிலமே
எதிர்காலம் நிகழ்காரிய முரைக்குங் கோகிலமே
வளர்பங்கய மலர்தங்கிடுந் தாராக்குஞ்சினமே
மயலாலலைவதுகண்டவென் தாயார்க்குஞ்சினமே
தண்புனல்சேர்குருகே தவிக்கும் மெனக்குருகே
சங்கரதாஸ் மாணவரிற் பொங்கியசீர்க் காவலனைக்—
கண்டால் வரச்சொல்லுங்கள் 2

தடமீதுறு திரைமேலலர் தண்செந்தாமரையே
தனதாருயிர் பெரிதாய்வெருண் டோடித்தாமரையே
அடராயிர விழியானூர் அணிசூற் கந்தரமே
அணியாகவே விரைவாய்வரு குழுமுற்கந்தரமே
அலர்மேவறுகாலே சிலேவேள் சிறுகாலே
அண்ணல்தனை எண்ணியெண்ணிக்
கண்ணுறங்கவில்லையெனக்-கண்டால்வரச்சொல்லுங்கள்

உலகோர்புகழ் கவிநாலிலு முயர்வாமோவியப்பா
உரைசித்திர முரைமாணவ ருயர்ந்தோரோவியப்பா
நலமென்றிடப் ளாக்குச்செய் தினிதாயச்சகத்தே
நல்கித் தமிழ்நாட்டவர்கள் நவின்றேமெச்சகத்தே
நாட்டமணிதருவாய் ஈட்டுமணிதருவாய்
நாதாவெமை அப்துல்கபூர் தூதாவிடுத்தாரெனவே—
கண்டால் வரச்சொல்லுங்கள் 4

அரும்பதவுரை

ஓம்பிடும் தென்னன் - காக்கும் பாண்டியன். முண்டகம் - தாமரை. அத்தவளை - கைவளையல். எழிலார் பாலனமே - அழகு நிறைந்த பால் நிறமுள்ள அன்னப் பறவையே. இக்குச்சிலை - கரும்பு வில். வராலே - வரால் மீனே. கோகிலம் - குயில். கோகிலம் - பல்லி. பங்கயம் - தாமரை. குருகு - கொக்கினத்தில் ஒன்று. தடம் - குளம் தா-மரை - தாவுகின்ற மான்களே. ஊர் அடர் ஆயிர விழியான் – அடர்ந்த ஆயிரம் கண்ணுள்ள தேவேந்திரன் ஊர்-ஏறி நடாத்தும் மேகமே. குழுவிற் கந்தரமே - கூட்டத்தில் முதலாக வரும் மேகம் போன்றயானையே. அறுகால் - வண்டு. சிறுகால் - தென்றல். ஓவியப்பா - சித்திரகவி. ஓ-வியப்பா - ஆச்சரியம் கண்டு வியப்படைய.

முதத்தமிழ்க்கலா வித்வ ரத்தினம்
உயர்திரு. **T. K.** சண்முகம் அவர்கள் மீது
பாடிய கிள்ளைவிடு தூது

(மும்மடக்கு-யமகம்)

மாலைவடிவேலருக்கு என்ற

கிளிக்கண்ணி மெட்டு

1. அரசமரத்துக்கிளி அணிபெறப்பேசுமென்றே
அரசனைப்போல் போற்றிமொழி—கிளியே
அரசம்பக்காள் அரங்காவென்றே - கிளியே

2. பாலருக்காய் போதித்தாப்போல் பழக்கியே நானுனது
பாலருளாய்க்கிண்ணியிலே—கிளியே
பாலருந்தச் செய்தேனடி - கிளியே

3. கண்டமரன்மேனிவிண்டு காலயன்செவ் வேளலகு
கண்டமதுப்போல் மொழிசேர்—கிளியே
கண்டதைநீ சொல்வாயடி - கிளியே

4. இச்சகமே போற்றுமெங்கள் இசைக்கூத்தரசரிடம்
இச்சகமாய்ப் பேசிவாராய்—கிளியே
இச்சடலம் பூரிக்கவே - கிளியே

5, அன்னவூர்தியமைத்தபடி அன்னவரைக்கண்டமுதல்
அன்னம்பாலிறக்கமில்லை—கிளியே
அன்னவருக் கெடுத்துரைப்பாய்-கிளியே

6. அல்லிலுறக்கமின்றி அவரை நினைத்துக்கொண்டே
அல்லிலுழலுகின்றேன்—கிளியே
அல்லின்றி நீக்கச்செய்வாய் - கிளியே

7, அவ்வையகத்தைவிட்டு ஆகாயத்திற்பறந்தே
அவ்வையகஞ்சேருவாய்—கிளியே
அவ்வையகம் போற்றவே - கிளியே -

8. காமன்போற்போகியரன் கண்படாமல் முன்னிருந்த
காமன்போல் வானைக்கண்டே—கிளியே
காமன்னெனக் கூறுவாய் - கிளியே

9. நாடகமே தான்புகழும் நல்லதமிழறிஞன்
நாடகமன்னன்றன்னை—கிளியே
நாடகத்தைக் காணச்சொல்வாய் - கிளியே

10. அச்சமின்றி மாணவர்கள் அணிமிறைப்பாவுணர
அச்சகத்திலேற்றிடச்சொல்—கிளியே
அச்சகத்தே புகழ்நிலைக்க - கிளியே

11. அரங்கத்தில்கம்பன்கவி அரங்கேற்றம் செய்தது
போல்
அரங்குள்ளார் மனமகிழ—கிளியே
அரங்கேற்றம் செய்யச்செய்வாய் - கிளியே

12. திருமணவாகைசூடும் செம்மலை எனதுமகள்
திருமணப்பொருளளித்தே—கிளியே
திருமணத்தைச் செய்யச்சொல்வாய் - கிளியே

13. பாரியவள்ளல்களில் பாவலருக்கீந்திட்டவேள்
பாரியுங் கபிலரும்போல்—கிளியே
பாரினிலே வாழச்செல்வாய் - கிளியே

அரும்பதவுரைகள்

அணி - அழகு. அர, சம்பு, அக்காள், அரங்கா என்று கிளிக்குப் பழக்குவது சகஜம். உனதுபால் - உன்மீது. அருளாய் - கிருபையோடு. ஆய் - தாயார். கண்டம் அரன் - சிவனுக்கும் கிளிக்கும் கண்டம் கருப்பு. மேனிவிண்டு -

விண்டு-விஷ்ணு. விஷ்ணுவுக்கும் கிளிக்கும் மேனிபச்சை' கால்வெள்ளை - பிரமன். அலகு-மூக்கு சிவப்பு. செவ்வேள் - முருகனும் சிவப்பு. கண்டம் - கற்கண்டு. மது - தேன். இச்சகம் - இந்த உலகம்- இச்சக வார்த்தை - மகிழும்படிக் கூறுதல். இச்சடலம் - இந்த உடம்பு. அன்னவூர்தி - பிரமன். அல் - இரவுக்காலம். அல் - வறுமை, அல்லின்றி - வறுமையில்லாதபடி. அ. வை. அகம் - அழகிய வைக்கோல் வேய்ந்த வீடு. அவ்வையகம் - தலைவர் அரண்மனை. அ. வையகம் - அழகிய உலகம். கா-மன் - கா-கற்பகம். மன் - அரசன், தேவேந்திரன். காமன் - மன்மதன் (சிவன் எரிக்குமுன்பிருந்த மன்மதன்) கா-மன் - காக்கவேண்டும் அரசனே. நாடுஅகம் - நாட்டிலுள்ளவர் மனம். அவரை . நாடிய மனத்தைக் காணச்சொல். அச்சம் - பயம். அணி - அழகிய. மிறைப்பா - சித்திரகவி. அச்சகம் - பிரஸ். அ-சகம் - அழகிய பூமியில், அரங்கம் - சீரங்கம். அரங்கு- சபை. வாகை - வெற்றிமாலை. செம்மல் - அரசன் போன்றவர். பாரிய - பெரிய, பாரினில் - உலகில்.

திரு சண்முகப் அவர்களின் குருமகான் சங்கரதாச சுவாமிகள்மீது பாடிய சிவலிங்கபந்தம்

திருக்குறள் வேதஞ் செப்பிய பொன்மொழி
புகழொடு தோன்றெனப் புகழ்பெறத் தோன்றியே
வானோர் புவியோர் வாயாற் சீயமிச்
சாதெனச் சகல கலையே தாரணி
பரவச் சுரராக தாளப் பாவே
நாடகத் தாலே பற்பல நூலே
தருங்கொடை ஞானி தாதா
சங்கர தாச சாமிசீர் வாழ்கவே.

தவத்திரு. சங்கரதாச சுவாமிகள் மீது சிவலிங்பந்தம்



சங்கரதாச சுவாமிகள் கீர்த்தனைகளுக்கு சாற்றுக்கவிக் கீர்த்தனை

பல்லவி

சங்கரதாச சாமியின்கீர்த்தனம் தமிழர்க்கு
விருந்தாமே—அதில்
தங்கியபொருட்சுவை அறிந்தால் வினையகற்றத்
தக்கதோர் மருந்தாமே (சங்கர()

அனுபல்லவி

மஙகள நாடக இரவிமறைந்தபின்னே மதியென
வந்து பிறந்தார்—தனது
வாழ்நாள் முழுவதுமே நாடகக் கலைக்கென
மதித்தே சுகத்தை மறந்தார்—மனதில்
பொங்கிய கவிகளைப் பற்பல நாடகமாய்ப் புனைந்தே
இல்வாழ்வைத் துறந்தார்—இவரே
புதுமையாய்நாடகச் சபையொன்று கூட்டியே
பூவுலகத்திற் சிறந்தார்—இவரின்
புத்திரர்போலவே பற்பல மாணவர் கற்றுயர்வாகிட
நற்குருவாகவே
போதித்து வழிகாட்டினர்-பக்திநெறியைச் சாதித்து
ஞானமூட்டினர் சித்தியைப்பெற்ற (சங்)

சரணம்

திங்களைச்சேர்ந்திலகும் தாராகணமெனச்
சீடரும் ஒளிவீசினர்-சிறந்தநம்
செந்தமிழ் நாடகத்தின் சிறப்பினைமேடைகளிற்
தேன்மழை போலப்பேசினர்-குருவுடைய
இங்கிதப்பாடல்களை ஏற்காதிருந்தவர்கள் ஏங்கி
மனது கூசினர்-அருட்கவியின்
இனிப்பையறிந்தவர்கள் நாத்தீகத்தன்மைவிட்டு
இலங்குவெண்ணீறு பூசினர்-சங்கரதாசர்

ஏற்படுத்திய சீர்கவித்திரள் கோத்தமுத்தெனச்
சேர்த்தமுத்தமிழ்
மாற்றுயர்ந்தது போற்றியுஞ்சிவ தோத்திரஞ்செய
நாற்பயன்பெற
இன்பமளித்திடும் அன்பு விளைத்திடும்
மன்பயனுற்றிடும் துன்பமகற்றிடும்
ஏதமழிப்பது போதமுரைப்பது
நீதியருட்பிர சாதமளிப்பது-சங்கரதாச
எழுத்தசை சீர்தளை எதுகைமோனைபுணர்ச்சி
இயல்பு விகாரந் தீட்டினர்—சந்தி
இலக்கணவுறுப்புகள் ஐந்தையும் கீர்த்தனையில்
எழுதி நடித்துக் காட்டினர்—உலகில்
வழுத்தா வடமொழியும் பற்பல நூல்வழக்கும்
மணித்தமிழ் தன்னிற் சூட்டினர்—அதனல்
மாணவருலகமும் நந்தமிழ் நாடகமும்வளர வுற்சாக
மூட்டினர்—சாமி
வாயுரை தேவுரை யாகவே பாரினில்
வாகைகள் சூடின நாடக மாகின
வாட்டமேன்தமிழ் நாட்டிலோர்கவி சூட்டுகீர்த்தனை
கேட்டறிந்தபின்
வாகுமிகுந்தமிழ்ச் சங்கரநம்பி சகோதரரச்சிட
மேகமாவந்தநம்—சங்கரதாச சாமியின்

P. V. அப்துல் கபூர் சாஹிப் புலவர்

இக்கீர்த்தனை (1956-நவம்பர் 19) இரவு 9-15-க்குமேல்
9-30-மணிக்குள் 15 நிமிஷத்தில் பாடி முடிந்தது

திரு. சண்முகம் அவர்களின் தந்தைதாய்மீது பாடிய
தேர்ப்பந்தம்

பூவே நாவே புகல்புகழ் பெற்றுப்
பூவார் வாகை புனைதிகழ் புயமுள
சற்குணக் கண்ணுச் சாமிநீ செய்த
புண்ணிய மனைத்தும் புகலவோ வானில்
அருந்ததி போற்கற் பரசி யான
நங்கை சீதையம் மாளொடு நல்லோர்
போற்றவே நனியறம் புரிந்து தமிழின்
பேரிசை பெருக நின்மக்க ளீண்டு
நால்வ ராகி நற்கலை வளர்த்திடக்
கண்டேன் காமலி பூவென்ன
நன்மக்க ளீன்ற நனிபுகழ் வாழ்கவே.

திரு. T. K. சண்முகம் அவர்கள் தந்தை-கண்ணுச்சாமி பிள்ளை,
தாய் - சீதையம்மாள் இருவரின் மீது பாடிய தேர்ப் பந்தம்



திரு. சண்முகமவர்கள் சகோதர மும்மணிகள் மீது கமலபந்தங்கள்



திரு. சங்கரன்பிள்ளை



திரு. முத்துச்சாமிபிள்ளை



திரு. பகவதி

1. திரு சங்கரன்பிள்ளை மீது பாடியது—நேரிசைவெண்பா

வானகன மாளசன ஞானமன ஞனதன
வானதிக நீதிதயை வாரியிடு—தானமலி
சங்கரவே ளாமெனவே தன்மனைவி மக்களொடு
மங்களமா வாழ்க மகிழ்ந்து.



1. சங்கரன்பிள்ளை கமலபந்தம், 2. முத்துச்சாமிபிள்ளை கமலபந்தம்
3 பகவதி கமலபந்தம்

2. திரு முத்துச்சாமிபிள்ளைமீது பாடியது

நேரிசைவெண்பா

நீதமத வேதனித மோதமுத போதமுத
லேதயவு சீலமரு ளேபொறுமை—யாதிமிகு
சாதுமுத்துச் சாமிமனை மக்கள் வளம்பெருக
நீதியுடன் வாழ்க நிலைத்து.

3. திரு பகவதிமீது பாடியது—நேரிசைவெண்பா

நேயமுய ராயனைய தூயதய வேயமைய
வாயமுத மேபொழி மாமுகிலே—தூயதமிழ்
பாரிற் பரப்பிப் பகவதிநின் பாரிமக்கள்
சீருயர்ந்து வாழி செழித்து.

திரு. சண்முகமவர்களின் சகோதர மும்மணிகள்மீது
பாடிய 3 கமலபந்தவுரை

1. வானகனமானசனம் - ஆகாயத்திலிருப்பதற்குத்தகுதி வாய்ந்த மனிதர்களில், ஞானமனன் - ஞானத்தில் மிகுந்த அரசன் போன்றவர். தனவான் - செல்வ முள்ளவர். அதிக நீதியும் தயவும் - யாவருக்கும் வாரிக் கொடுக்கும் ஈகையும் மிகுந்த. சங்கரன் என்னும் நாமம் பெற்ற மன்மதன் போன்றவர் தனது மனைவி மக்க ளோடு மகிழ்ந்து வாழ்வாராக.

2. நீதமதவேதம் - நீதியான பல சமயமுறைகளை. ஓது அமுதபோதமுதல் - ஓதியும் அமுதம்போலப் பிறருக்குப் போதிக்கு முதல்வர். தயவும் சீலமும் கருணையும் பொறுமையும் மிகுந்தவரும் ஆகிய முத்துச்சாமி என்ப

வர், மனைவி மக்கள் செல்வ முதலியன பெருக, நீதி யோடு உலகில் நிலைத்து வாழ்வாராக.

3. நேயம் உயர் ஆய்அனைய - நட்பில் உயர்வான தாயைப் போல தூய தயவு அமைய - பரிசுத்தமான கருணை அவரிடத்திலும் செலுத்தும் மனமானது அமையப் பெற்று, வாய் அமுதம் பொழியும் மாமுகிலே - வாயால் அமுதம் பொழியும் பெரிய மேகம் போல, தூயதமிழ் பாரிலே பரப்பி உன்னுடைய மனைவிமக்கள் பல வளத் தோடு கீர்த்தி பெருக பகவதி நீ செழித்து வாழ்வாயாக.

திரு: சண்முகமவர்கள் திருமனைவியார் சீதாலட்சுமி அம்மாள் மீது பாடிய தேர்ப்பந்தம்

1. பூவே வாவே புகழ்கமழ் வளம்பெற
2. வாணி நீவா வாக்கு விறலுற
3, வாசக் கற்போ ருருவாய் வந்தே
4, திருமா ஞானஞ் சீலந் தருமம்
5. இல்லறம் மிளிர வேபணி புரியும்
6. சுகுண மாது தூய மாட்சி
7. நீடுழி நிலவ வணிதார்
8. சீதா லட்சுமி சீருற வாழ்கவே,

அரும்பதவுரை

1 பூ - இலக்குமி. வளம் - செல்வம். 2 விறல் உற - வண்மை பொருந்த 5 மிளிர - பிரகாசிக்க. 6 சுகுணம் - பரிசுத்தமான குணம். 7 நிலவ - நிலைபெற. அணி - அழகிய தார் - மாலையணிந்த

திரு. T. K. சண்முகமவர்கள் மனைவி சீதாலட்சுமியம்மாள் மீது பாடிய

தேர்ப் பந்தம்



திரு. தி. க. சண்முகம் அவர்கள் மருகரும்
சகநடிகருமாகிய சிரிப்புவேந்தன், சிவதாணு
அவர்கள்மீது பாடிய தோப்பந்தம், வாழ்த்து

(நிலைமண்டிலவாசிரியப்பா)

1. பூவே நாவே புகழ்திகழ் சண்முகம்
2. வாச மருகன் மண்ணுல கேத்தும்
3. கற்புள தாயார் மீனாட்சி கருவில்
4. நவமணி நல்ல கண்ணுப் பிள்ளை
5. மாசிலாத் தவமோ ருருவாய் வந்தோன்
6. துதிகொள் சங்கர தாசர் சொந்த
7. மாணவ னாகி முருகவேள் மலரடி
8. நம்பும் நம்பி ஒப்பிலா வரிய
9. சிரிப்பு வேந்து சிவதாணு வாழ்கவே.

T. N. சிவதாணு மீது பாடிய தேர்ப்பந்தம்



வாழ்த்துக் கீர்த்தனே

தாளம் ஆதி—இராகம் செஞ்சுருட்டி

பல்லவி

வேலாயுதக்கரமும் காலாயுதக்கொடியும்
வேடக்குறமக ளானேத்திருமகள் வீரக்கழலொடு
தோகைப்பரியையும்
வேண்டும் சண்முகம்வாழி—சுற்றத்தாரொடு
ஈண்டுபற்பலவூழி—புகழ்மணம்
வீசிடுசங்கர தாசரினன்புள தாசரில்முன்புயர்
கேசரியென்றிட
வெற்றித்தொடையைப் பெற்றவன் கூடல்வளர்த்த
முத்தமிழ் முற்றுங் கற்றவன் (வே

அனுபல்லவி

கோலாகலத்தின்மிக்க நூலோர் வகுத்துரைத்த
கொங்குள நாடக மங்களமாகவே பொங்கிடமேடையி
லிங்கிதமாத்தமிழ்
கொண்டலெனப் பொழிபவன் பாடல்தனேக்கற்
கண்டெனவே மொழிபவன்—இவன்
உத்தமபத்தினி புத்திரர்நற்றுணே மித்திரர்நற்குழு
வுற்று நடிப்பவர்
உலகமெச்சிடவாழி நாடகங்கள்பற் பலது நடத்தி
வாழி (வே)

சரணம்

திருவனந்தபுரத்தில் திருவுடனுற்பவித்த
செம்மலாம் கண்ணுச்சாமி சீதைநங்கைக்கும்
தம்மகனுகிப்பூமி தனிலுயர்ந்தோர்
செப்பியநற்புகழ் பற்பலபெற்றவன் அப்துல்கபூர்கவி
செப்பிய அற்புதச்
சித்திரப்பாமாலை சூடினேன் மலைவிளக்காய் நித்தம்
வாழச் சீரைத் தேடினேன்—இவன்
திரையிற்கதிரென நிலவிப்பலவளம் பெருகக்
கொடைமழை பொழிநற்கரமொடு
சீர்ப்பாரியொப்பவாழி தமிழ்வளர்த்துப் பார்ப்
போர்கள் மெச்ச வாழி (வே)



இந்நூலாசிரியர்:

P. V. அப்துல்கபூர்சாஹிப் - புலவர்

5A
5-9